# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு கூகூகூரு | மலர் |
|---|---|---|
| | குரோதி, ஆவணி. | |
| ௩௰ | 1964 ஆகஸ்ட், செப்டம்பர். | ௫ |


## புரட்சிப் பேரொளி பூங்குன்றன்


புலவர் தி. நா. அறிவுஒளி


இலக்கியப்படைப்பாளன் மன்பதையின்—மக்களினத்தின்—உரிமைக் குரலாவான். துன்புற்றோர், இரக்கத்திற்குரியோர், புறக்கணிக்கப்பட்டோர், ஏமாந்தவர் ஆகியோரின் துன்பியல் வாழ்வை உணர்ச்சி நயத்தோடு எடுத்துக்காட்டி; நேர்மை வேண்டி மன்றாடும் வழக்குரைஞனாகவும், அதே போதில் தெளிவான அறங்காட்டும் அறத் தலைவனாகவும் விளங்குபவன் இலக்கியப் புலவனே' யாவான். இழுக்கிலிருந்தும், இழிவிலிருந்தும், பழிப்பிலிருந்தும் பேதையரை வெளியே எடுத்துக் காப்பவன் கலைஞனே. பேச முடியாதவர்களின் உள்ளுணர்வை உலகறிய எடுத்து முழங்கும் பரிவுள்ளவன் அறிஞன். காணமுடியாதவர்கட்குக் கண்ணும் ஒளியும் அளித்துக் காட்சி யருள்பவன்; கேட்கமுடியாதவர்களைக் கேட்கச் செய்பவன் உண்மைப் படைப்பாளனே யாவான். சுருக்கமாக உலகியலை உருவாக்கி, இயக்கி ஆள்பவனே புலவன் தான்.

மக்கள் மன்றத்தின் மடமை—கொடுமைகளைச் சுட்டிக் காட்டித் திருத்தும் ஆசிரியன் எழுத்தாளனே. மன்பதையின் கடமை—உரிமைகளை உணர்த்தி வழிநடத்தும் தந்தையும், நாட்டுப்பண்பு—நாகரிகம்—கலையொழுக்கம்—ஒழுகலாறு என்றிவற்றைப் பேணிக்காக்கும் அன்னையும், அறிவு—அறம்—மறம்—காதல்—ஒழுக்கமாகிய வற்றையும், கலைநலத்தையும் காக்கும் செவிலியும், இளையோர்க்குத் துணைபுரியும் தோழனும், முதியோர்க்கு உதவும் தொண்டனும் எழுத்தாளனே யாவான்,

உலகின் அறக்குரலே புலவன்—கலைஞன்! உலகின் உள்ளச் சான்று இலக்கியப் படைப்பாளனே.

உழைம்பு. முன்னேறுவதற்கு உயிர் நிலையானது. உண்மை. ஆயின், எத்துணை உழைப்பாளிகள் ஏதொரு களைகணுமின்றி வாழ்ந்து(?) வீழ்கின்றனர்! எத்துணைப் பாட்டாளிகள் வாழ்க்கை முடிவு கருதுவாரற்ற இரங்கத்தக்க நிலையில் கிடக்கின்றது! இதையெல்லாம் எண்ணிப்பார்க்கும் போது, மன்பதையமைப்பில் உள்ள குறைபாடு (குறைபாடா? குழப்பமா? அன்றித் திட்டமிட்ட தீவினையா?) புரிகிறது. அதாவது, மக்களுக்கு மக்கட்டன்மையும், மாந்தரின உணர்வும், மக்கள் உறவுப் பண்பாட்டு அன்பும்' அரும்பவே இல்லை என்பதையே இது மெய்ப்பிக்கின்றது. ஏழையர் சிலர் இரங்கத்தக்க உழைப்பாளர்க்கு இரக்கமும் அன்பும் காட்டி உதவுவதைச் சுட்டிக்காட்டி, 'அவர்களிடம் மக்கட்டன்மை இருக்கிறதே?' எனவினவலாம். ஆம். அத்தகையோரிடம் மக்கட் பண்பிருப்பது உண்மையே. ஆயின், முக்கால் பகுதியினர்க்கு மக்களுணர்வு அரும்பவில்லை. ஒருபயன் கருதி அன்பு பாராட்டுவதும், இரக்கம் காட்டுவதுமே வழக்காருக உள்ளது இதைத்தவிர, உண்மை இரக்கமாக, உண்மையுணர்வுருக்கமாக, உண்மையன்புப் பெருக்காக அமையும் உள்ளப்பண்பாடு உருவாகவில்லை. இம்மன்பதையமைப்பின் முழுமுதல் நோக்கம் என்ன? என்பதை ஆராய்ந்து தெளியாமையே மக்களின் இக்குறை யறிவுடமைக்கு அடிப்படையாம்.

நம்மருகிருந்து துன்பக்குரல் எழுப்பி அழுது கவல்கின்ற உயிரின்பால் அருளிரக்கம் கொண்டு, உதவாத மக்கட் பிறவி உண்மையான உயர்திணைப்பிறவி தானு? நினைந்து நினைந்து நெஞ்சு நெகிழ்கிறேன். செயற்றிறம் குறைந்த என் போலு மெளியார்க்கு மட்டுமே இளகிய நெஞ்சமளித்து விட்டதோ ஊழ்? அறிவுவளம் பெற்றோரில் எவ்வளவுபேர் வல்லுணர்வினராக உவந்து வாழ்கின்றனர்! அத்தகு நிலை பண்புடையது தானு? மாற்ருர் துன்பத்தை நன்கறிந்தும், அதைத் தீர்த்து வைக்கும் திறனற்ற கோழையாகச் செயலற்றவனுகச் சிதையும் நிலை கழி பேரிரக்கத்திற் குரிய தொன்ரும்.

அரசியலாளர்கள், தொண்டர்கள், கலைஞர்கள், ஏழை பங்காளர்கள் எனவெல்லாம் புகழ்கூறிக் கொள்கின்றவர்கள். தாம் நனிமிகப் பெருந்தொண்டுகள் ஆற்றி விட்டதாக எண்ணுவதும், அவ்வாறு பிறரால் புகழ்பெறுவதும் கண்டு, உண்மையில் உள்ளம் துன்புறுகிறது. எத்துணை இரக்கத்திற்குரிய மக்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு, அவர்கள் துன்பம் தீர்க்கப்பட்டது இவர்களால்? உண்மையில் பலகோடியர் துன்பக் கடலாடித் துவள்கின்றனரே! ஓரளவேனும் உண்மைத் தொண்டாற்றுபவரும் உள்ளனர். ஆயின், அதை வெற்றி.

முரசு கொட்டி முழக்கித் தன்னலம் தேடிக் கொள்வதே அவர்கள் தொண்டுணர்வின் பால் ஐயம் உண்டாக்குகிறது.

அரசியல் வாழ்வினரும் தம்மை 'ஏழையர் காவலர்' என மேடையில், அறிவிப்பு செய்து கொள்வதைக் கண்டு பொது மக்கள் ஏமாறுகின்றனர். ஆயின், உண்மையான ஏழைகளின் காவலன், தானே அதை எடுத்துச் சொல்ல மாட்டானே!

உண்மையாகப் பிறர் உள்ளத்தோடு நாம் தோய்கிறோமென்றால், அவ்வுணர்வின் எதிரொலி அவர்கள் உள்ளத்திலும் அதிர்ந்து முழங்கி ஆர்ப்புரிக்குமே! அதை மேடையேறி முழக்கியா பறையறைவது? அதை ஏட்டில் எழுதியா முரசறைவது?

இக்காலத்தில் எல்லா நாட்டிலும் இந்நிலை இருக்கிறது. இதற்கு மாற்று மருந்து எங்கே உள்ளது? இத்தீவினைகள் தீரும் வழி என்ன?

ஆம். செந்தமிழ்க் கோவிலின் சீரார் முதற் செல்வப் பெருந்தகை பூங்குன்றப் பெரியோனின் ஆரா இன்ப அன்புணர்வுக் கொள்கைதான் உலகை உய்விக்கும் அரும் பெறல் அமிழ்தம். வேறு எம்மருந்தும் மாநிலத்தைத் தாக்குகின்ற தீநோய்களைக் களைய முடியாது. உணர்ச்சிப் பண்பாடு ஒன்றே உலகச் சீர்திருத்தத்துக்கு அடிப்படையாம். 'தன்னுணர்வு மலர்ச்சி' என்ற தனிப் பெருங் கல்வியில் மாந்தரனைவரும் உண்மையாக முழு முயற்சியோடு தலைப்பட்டாலொழிய உலகம் பண்படுதல் அரிதேயாம்.

வாழ்வாங்கு வாழ இயலாதவர்களுக்காக—வாழ்வை நொடிகளுக்கு அடைமானம் வைத்து விட்டவர்களுக்காகப்-பொய்மைகளை நம்பி உண்மைகளை—ஒண்மைகளை உணராதவர்களுக்காக ஊனும் உணர்வும் உருகித் துடிக்கும் என்றன் நாணங்கனிந்த நல்லுள்ளம் பூங்குன்ற மேதையின் புலனுண்மைச் செம்பாட்டையே புகலிடமாகக் கருதுகிறது! நலிந்த வாழ்வுச் சிறையிலிருந்து நானிலத்தை விடுதலை செய்து உய்விக்கத் தோன்றிய உயரறம் பூங்குன்றனின் பூமொழிகள்!

'எவ்வுயிர்த்திரளும் தன்னுயிராய் எண்ணியுவத்தற்கு அறிவூட்டும் உணர்வமுத சுரபியது! தீங்கும் நன்மையும் பிறர் தர வந்ததென நம்பும் மனப்பான்மையைத் தகைந்து, உண்மைகாட்டும் ஒளிச்சுடர் பூங்குன்றன் பாடல்! போற்றலும் தூற்றலும் போதிய சிறப்புப் பெற்று, அதையும் கடந்து அளவிறந்த செல்வாக்குப் பெற்றுள்ள இவ்வுலகில், பெரியோரை வியத்தலு மிலமே; சிறியோரை இகழ்தல் அதனினும்

இலமே' என்று புரட்சிக்குரல் எழுப்பிய முதற்புலவர் உள்ளமே காதலுண்மையுள்ளம்.

'பாராட்டாலும் பகை வளரும், பழிப்பாலும் இகல்கிளைக்கும்' என்பதை யாமறிவோமல்லவோ? பகைவென்ற நகை வாழ்வு நாடும் நாம் நடுநிலைமையுணர்வுடைய நல்லாறு காட்டும் சொல்லாண்மை பூங்குன்றனின் புதுமையாணை.

துயரம் உலகியற்கை அதனோடு உறவாடாமல் வாழ்வது இயலாது. வாழ்வில் எத்துணை கோடி வாய்ப்புக்கள் வளர்ந்தாலும், புதுப்புதுத் துன்பங்களும் தோன்றும். ஆகவே, துன்பத்தைக்கண்டு ஓடி ஒளிய முடியாது, துன்பத்தைக் கூடித்தழுவி வெறுக்காமல் பொறுக்குமியல்புதான் உலக வாழ்வின் 'நடைக்கல்வி' எனக் காட்டும் 'பூங்குன்றன்' காட்சி புத்துலக ஆட்சிக்கு அடிவாரம்!

துயர், நிலைபெறாது என்றும், அது நீங்குதலால் உள்ளம் வெறித்தலோ செருக்குதலோ இயல்புக்கு மாறானது என்றும் கூறித், துன்பமும் இன்பமும் பிறர்தர வாராதவை என உண்மை புலப்படுத்தி நம் பழம்பெரு மடமைகளை ஓட்டிப் புத்தொளி காட்டுவார் பூங்குன்றப் புகழேந்தியார்.

உணர்வாலும், அறிவாலும், உயிராலும், வாழ்வொழுக்கத்தாலும் கற்றுணர்ந் தொழுகிட வேண்டிய புறநானூற்றுப் புத்தறிவுப் புதையலைத் தந்தவர் உலகின் விடுதலைக்கு வித்திட்ட ஒப்பில் புரட்சித் தலைவராவார்! அமைதிக் கோவிலே புரட்சிப் பேரொளியாம். அவரே உண்மை இலக்கியப் படைப்பாளர்; வாய்ய்மைப் புலவர்; மெய்யறிஞர்.

உலகில் துன்புறு வோருக்காகப் பாட்டொளிகாட்டிய பூங்குன்றன் அறிவொளியைப் புரிந்து கொண்டால் உலகின் சிக்கல்கள் குறையும்; அன்பும் அறமும் அருளும், நிறையும், ஒழுங்கும் சிறக்கும்.

---

## பாராட்டும் வாழ்த்தும்

செந்தமிழ்ப் பண்பிற் சிறந்து விளங்க மாணவர்கட்குப் பைந்தமிழ் நூல்களைப் பயிற்றுவதோடு செம்மைசான்ற நுணுகிய ஆய்வுரையாலும் நுண்மாண் நுழைபுலமிக்க எழுத்தாலும் அருந்தமிழ்ப்பணி புரிந்துவரும் பேராசிரியர் திருவாளர் **சி. இலக்குவனார்** எம்.ஓ.எல். பிஎச்டி அவர்களின் தொல்காப்பிய ஆய்வுரை கருதிச் சென்னைப் பல்கலைக்கழகத்தார் பண்டாரகர் (டாக்டர்) பட்டம் தந்து சிறப்பித்துள்ளமை அறிந்து பெரிதும் மகிழ்ந்து பாராட்டுகிறோம். பேராசிரியர் அவர்கள் மேலும் தண்டமிழ்ப்பணியில் ஓங்கி மண்டலம் புகழ வளம் பலசார்ந்து நலமுற வாழ வாழ்த்துகிறோம்.

**பொழிற்றொண்டர்.**

# மனையறத்தில் கண்ணகி

புலவர்; ந. செகதீசன் (தமிழன்பன்)

---

**வாழ்த்து :** (பஃறொடை வெண்பா)

மண்பூத்த பன்மொழிகள் வான்பூத்த மீன்களா
எண்பூத்த திங்களென இங்குலவு செந்தமிழே!
கண்பூத்த நன்மணியாய்க் காவலர்கள் ஏற்றோம்பப்
பண்பூத்த முச்சங்கப் பைம்பொழிலில் இன்புறவே
மின்பூத்த நல்லியலு(ம்) மேதக்க தேனிசையும்
நன்கேத்தும் நாடகமும் நாடி நயந்தளித்தோய்!
சிந்தைவயல் செம்மையுற எண்ணமழை பெய்முகிலே!
புந்திக்குப் பொன்று விருந்தளித்துப் போற்றியெமை
வாழ்விக்கும் வண்மைமிகு தாயே! உனதடியைத்
தாழ்ந்து தலைமேல் தரிக்கின்ற சின்னவன்நான்
இந்த அவைதனிலே இன்பக் கவிபாட
வந்துன் அருளாலே வாழ்த்து! (க)

**வணக்கம்:** (அகவல்)

பூவடி தேனெனப் போற்றருஞ் சிறப்பின்
பாவடி நாவோய்! பைந்தமிழ்ப் புலவ!
சங்கப் பாட்டின் கருத்தினைச் சாற்ற
இங்கெவ ராலே எளிதிலே இயலும்
என்ற போதிலே இருக்கிறேன் நானென
முன்னர் வந்து முத்தான சொல்லால்
அளவிலா நூல்கள் ஆக்கி மக்கள்
உளமிக உவப்ப உயர்பணி செய்தோய்!
படிப்பவர் செவியிற் புகாஉ லக்கை
படிவிளக் கெண்ணெய் பாகற் கசப்பே
இலக்கணம் என்பர்! இல்லை அதுதான்
பலவின் தீஞ்சுளை! படையல் விருந்து!
பட்டால் செவிக்குப் பாகின் இனிப்பு!
விட்டால் துன்பம் விளைக்கும் உறவெனச்
சாற்றினை! சாற்றிய வண்ணம் இன்பத்
தூற்றலாய் இலக்கணச் சுடர்நூல் ஈந்தனை!
வாழ்த்தத் தகுதியால் மழலைப் பிள்ளை
தாழ்த்தினேன் சிரமுன் தண்டமிழ் அடிக்கே! (உ)

---

திருச்செங்கோடு கண்ணகி விழாக் கவியரங்கத்தில் 24-5-64ல் திரு இ. வ. ஜ. அவர்கள் தலைமையில் பாடப்பெற்றது.

**(எண்சீர் விருத்தம்)**

திருப்பெற்ற செங்கோட்டார் தேடு கின்ற
திந்திப்புச் சர்க்கரையைப் பாட்டில் ஏற்றி
வருகையிவண் புரிந்துள்ள கவிவா ணர்காள்!
வற்றாத நீர்வசதி வாய்ப்புக் கேங்கி
உருகுகின்ற இவ்வூரில் கவிதை மாரி
உவப்புறவே பெயவந்த கவிமு கில்காள்!
பெருகிவரும் மனத்தன்பின் ஈரச் சொல்லால்
பெரிதுமுறை நான்போற்றி வணங்கு கின்றேன்! (ங)

நாவினிக்கும் எடுத்துரைத்தால்! பிறரெ டுத்து
நன்றுரைக்கச் செவிமடுத்தால் செவியி னிக்கும்!
பாவினிப்புப் போலினிப்புப் பிறிதொன் றில்லை!
பாலினிப்பும் தேனினிப்பும் பழத்தி னிப்பும்
பூவுலகில் தெவிட்டிவிடும்! சலித்துப் போகும்!
புதுமைகெடும் எனத்தேறித் தமிழ்ப்ப ணிக்குச்
சாவதெனில் சாவினிக்கும் என்று ணர்ந்த
சால்புடைய அவையோரே மிகவ ணக்கம்! (ச)

**அவையடக்கம் :**

பொடிமுல்லைப் பூவெடுத்து மாலை கட்டும்
பூவையென மனக்கொடியில் இனித ரும்பி
வெடிக்கநறுங் கருத்தெடுத்துக் கவிதை மாலை
வியப்புறவே தொடுக்கின்ற கவிஞர் உள்ளே
பொடிப்பயல்நான்! புகவிட்டீர்! புகுந்து விட்டேன்!
புன்மாலை என்மாலை என்ற போதும்!
நடிப்புக்கு மதிப்பளித்தால் கவிஞன் என்று
நான்கொண்ட வேடத்தைப் போற்ற வேண்டும்! (ரு)

மண்ணுலகில் எத்துணையோ இலக்கி யங்கள்!
மணிக்குவைகள் அவையெல்லாம்! ஆனால் இன்பப்
பண்ணுலகில் பயில்வோர்தம் மனம்வ ளைக்கும்
பண்பார்த்த சிலம்பொன்றே கோகி னூராம்!
பெண்ணுலகில் கட்டிடங்கல் கோடி! கோடி!
பேரெழில்செய் தாசுமகள் கண்ண கிப்பெண்!
விண்ணுலகின் முடிதேடும் குருவி போல
விரித்தவளின் மனையறத்தைக் கூற வந்தேன்! (சு)

பூம்புகார் : (கொச்சகக் கலிப்பா)

முற்றியநல் வளமெல்லாம்
முற்றுகைசெய் பொன்னகரம்!
கற்பனையாம் சிறகுடைய
கவிஞருள இசைப்பறவை
சுற்றிவந்து சுற்றிவந்து
சுடர்க்கவிதை பொழியுமொரு
பொற்புடைய திருநகரம்
புகாரென்னும் பெருநகரம்! (எ)

மடற்றாழை மணம்பரவும்
மகிழ்தென்றல் இசைபரவும்!
கடலலையின் ஒலிபரவும்!
கவின்சோலை நிழல்பரவும்!
மடக்குயிலின் இசைபரவும்
மணிமனைகள் சுடர்பரவும்!
அடடாவோ முத்தமிழும்
அங்கிருந்தே பரவுமெங்கும்! (அ)

புக்கவர்கள் வேற்றூர்க்குப்
புறப்பட்டார் எனவின்றித்
தக்கவளம் தாவிநலம்
தந்துதவி வாழுகின்ற
மக்களுக்கு மகிழ்வளிக்கும்
மாநகரம்! தேனகரம்!
சிக்கவில்லை பொருளென்று
தேம்பாத புகார்நகரம்! (கூ)

நடையெடுத்து வருகின்ற
பஞ்சத்தை நடுங்கவைத்துப்
படையெடுத்து வருந்துயரைப்
புதைக்கவுயிர் வாங்குகின்ற
கொடைகொடுக்கும் கரவூற்றுக்
கொழுங்குடியின் செழுஞ்செல்வர்
தடையின்றி வாழுகின்ற
தன்னிகரில் நன்னகரம்! (க0)

இன்பமெனும் நறுங்காற்றில்
எவ்வெவரும் மூச்சுவிடும்
அன்னவெழில் நகரினிலே
அருமைமிகும் ஏழடுக்குப்
பன்னலஞ்சேர் மாளிகையின்
பாங்கான இடைநிலத்தைக்
கண்ணகியும் கோவலனும்
நன்னுதலும் நாயகனும்
நன்றடைந்து சேர்ந்தார்கள்! (கக)

**பள்ளியறை - கட்டில் :** (வேறு)

கால்களெலாம் களிறளித்து வெள்ளைத் தந்தம்!
கவின்சட்டம் கடலளித்து பவளம்! கட்டில்
மேல்புதிய சிறுவானம் நீலப் பட்டு!
மினுமினுப்புத் தோரணங்கள் முத்துக் கோவை!
பால்வெள்ளை நிலவோ! செங் கதிரோ! பூத்த
பனிமுல்லை மலர்க்குடிலோ! பொற்பல் லக்கோ!
கால்கொண்டு நகரவல்ல மணிப்பூந் தேரோ!
காண்டகுநற் பளிங்கில்லோ! யாதோ என்று (கஉ)

பார்த்தவர்கள் பார்த்தபடி வியப்ப டைந்து
பலபடியாப் புகழுகின்ற படியி ருக்கும்!
சீர்த்திமிகும் அக்கட்டில் மேல்ப டிந்த
செழுமெத்தை வான்படிந்த வெண்மு கில்போல்
சேர்ந்திருக்க வெண்பட்டு விரித்தி ருந்தார்!
சேண்மணக்கும் நாண்மலர்கள் தூவி வைத்தார்!
நேர்த்தியுறத் தலையணைகள் போட்டே! இன்பம்
நிறைமணத்தை மிகும்படியாச் செய்தி ருந்தார்! (கங)
பன்னீரும் சந்தனமும் அங்கு வைத்தார்!
பசும்பாலைப் பொற்கலத்தில் நிறைத்து வைத்தார்!
இன்புதரும் முக்கனியும் தேனும் வைத்தார்!
எழில்தந்த விசிறிவைத்தார்! விளக்கு வைத்தார்!
நன்மணத்து நெய்க் கலவைக் கிண்ணம் வைத்தார்.
நலஞ்சேர்க்கும் ஒப்பனைக்குத் தேவை யான
இன்னும்பல் பொருள்வைத்தார்! இனிதி ருக்க
இருவரையும் ஒருசிறையில் அடைத்து வைத்தார்! (கச)

(தொடரும்)

# சீதை

த. இராமநாதபிள்ளை B. A. Lond., பருத்தித்துறை, யாழ்ப்பாணம்

அழகாலும் அறிவாலும் அன்பாலும் ஒழுக்கத்தாலும் காவியத்தலைவிகளுள் சிறந்து மிளிரும் வண்ணம் சீதை வருணிக்கப்பட்டுள்ளாள். வரம்பில் பேரழகினளாதலின், சீதை திருமகளின் திருவவதாரமாவாள் என உரைக்கப் படுதலை அறிக. நிறைகாத்தலுக்கு இன்றியமையாதவையாகிய அறிவு அன்பு ஒழுக்கம் என்பன சீதையிடம் நனி துலங்குதலால் சீதை கற்பினுக்கு அணியாவள் எனப் பாராட்டப்படுகின்ருள். கொழுநன்மீது வைத்த அன்பே சீதையை வாழ்க்கையில் வெற்றிபெறச் செய்ததெனலாம். பேரன்புடைமையாலன்றே சீதை அரும்பொறை யுடையளாய் இருந்து இன்னல்கள் பல வற்றையும் சகித்து உயிர் வாழ்ந்து அரக்கவுலகிலிருந்து மீட்சி பெற்ருள். சீதையின் அழகிலும் அவளுடைய கூர்த்த மதியும் ஒழுக்க மேன்மையும் காவியங்கற்போரின் மனத்தைக் கவர்கின்றன. மகளிர்க்கு இன்றியமையாத மென்மையும் பெண்மையும் பேரன்பும் பெருங்கற்பும் அரும்பொறையும் இல்லறத்தில் வெற்றிபெறுதற்குக் காரணமாயின. இத்தகைய சிறந்த நற்பண்புகள் உடையளாகச் சிறப்புற்றிருக்கும் சீதையின் வாழ்க்கைத் திறனை ஆராய்வாம்.

## சீதையின் இன்பவாழ்க்கை

தான் விரும்பிய வீரனே வில் முறித்தான் எனக்கேட்டுச் சீதை பெருமகிழ்ச்சி யடைந்தாள். உருவாலும் திருவாலும் குலத்தாலும் குணத்தாலும் ஒத்த ஒரு கொழுநனைப் பெறுதல் பெரிய பாக்கிய மன்ருே. ஆடவருள் சிறந்தோனாகிய அரசிளங்குமாரனாகிய இராமன் மகளிருள் சிறந்த அரசிளங் குமரியாகிய சீதையும் இல்லறம் இனிது நடாத்தியிருந்த காலை இராமன் அரசுரிமையைத் துறந்து கானகம் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அத்தருணத்தில் சீதையின் நற்பண்புகள் நனிமிளிர்கின்றன.

## சீதையின் பிரிவாற்ருமையும் மெய்யன்பும்

தன் காதலன் சீரை யுடையினனாகத் தன் முன்வருதலைக் கண்ட சீதை துணுக்குற் றெழுந்தாள். இராமன் பிரிவின் எல்லை கூருது "பரதன் புவியாள யான் காடுபோய்த் திரும்பி வருவேன். வருந்தலை" என மொழிந்தான். கீழ்வரும் செய்யுள் சீதையின் மனநிலையைக் காட்டும்.

நாய கன்வன நண்ணலுற் றுனென்றும்
மேய மண்ணிழந் தானென்றும் விம்மலள்
நீவ ருந்தலை நீங்குவன் யானென்ற
தீய வெஞ்சொற் செவிசுடத் தேம்புவாள்

—நகர் நீங்கு படலம்

இராமன் அரச பதவியைத் துறந்து காடேகின்றான் எனச் சீதை கவன்றிலள்; தன்னைப்பிரிந்து போகின்றான் என் பதை எண்ணியே சீதை துயருற்றாள். தந்தைதாயார் சொல் லுக்குக் கீழ்ப்படிந்து கானகம் செல்லும்போது தன்னை ஏன் கூட்டிச் செல்லக் கூடாதென வருந்தினள். "காட்டு வழியி லுள்ள பரற்கற்கள் தைத்தலைத் தாங்குதற்குரிய வல்ல நின் சேவடிகள்; அவை காட்டதர் சுடுதலைப்பொறுக்க மாட்டா", என இராமன் இயம்ப; "உமது பிரிவினும் கானகத்துள்ள வெம்மை பெரிதோ?" என வினவினள் சீதை. இதைக்கேட்டு இராமன் சிந்தனையில் ஆழ்ந்திருந்தானாகச் சீதை மரவுரி தரித்து வந்து அயல் நின்றாள். அதிகம் பேசாமல் சீதை மன வுறுதியுடன் காடேகத் துணிந்து வீரபத்தினியாயினள். கொழுநனின் இன்ப துன்பங்களில் பங்கு பற்றுதல் தம்கடமை என்பது கற்புடை மகளிர் கொள்கையே. கோவலன் மதுரை செல்லும்படி அழைக்கக் கண்ணகி துயர்மறந்து காதலனோடு மதுரை சென்றதுபோல் மனத்துன்பமின்றிச் சீதை தன் காதலனோடு காடு சென்றாள்.

தன் காதலன் மீது சீதை மெய்யன்பினள் என்பது கூறுமலே அமையும். விராதன் சீதையை எடுத்துச்செல்ல இராமலட்சுமணர் விராதனோடு பொருதனர். சீதையை விட்டு இராம லட்சுமணரை விராதன் தூக்கிச் செல்லச் சீதை அவர்களை விட்டுத் தன்னைப் புசிப்பாயாக வெனப் புலம்பினள் அல்லவோ? பின்பு பஞ்சவடியில் இருந்துழி சூர்ப் பணகையைச் சீதை மிகவும் அஞ்சினள் "ஆடவனோடு பேசும் பொழுது நீ இடைவந்த தென்ன' என அரக்கி வெருட்டினள். அப்போது பெண்களுக்கு இயல்பாயுள்ள அச்சத்தினல் சீதை இராமனைத் தழுவினாள். வரம்பில் பேரழகினள் மருங் குள்ள வளவும் இராமன் தன்னைப்பாரான் என எண்ணிய அரக்கி சீதையை எடுத்துக் கொண்டுபோய்க் கரந்து வைக் கத் துணிந்தாள். சோலையில் மறைந்திருந்து காவல் செய்த இலக்குமணன் அரக்கியை 'நில்லடி என உரப்பி' மூக்கு முதலியன அரிந்து சீதையை மீட்டான்.

### சீதையின் பெண்ணியல்பு

இலங்கை மன்னனின் ஏவற்கி சைந்து மாரீசன் பொன் மான் உருவங்கொண்டு நன்மானனையாள் முன் சென்றான்.

மின்னெக்கும் செம்பொன் மேனியும் வெள்ளியின் விளங்கு புள்ளியினையும் உடைய மாயமானின் அழகு அழகியின் அகத்தை ஈர்த்தது. இவ்விடத்துப் புலவன் மனிதவியற் கையை உள்ளவாறே படம்பிடித்துக் காட்டுதலைக் காண்க. இம்மானைக் கொண்டுபோய் அயோத்தியில் வைத்திருந்து விளையாடலாமே எனச் சீதை நினைந்தாள். இலக்குமணனும் இராமனும் இது மாயமானே அன்றோ என வாதித்தனராக, ''மான்போய் விடுமே'' எனச் சீதை கவன்றாள். சீதையின் புலவியைத் தீர்த்தற்கு இராமன் மான் பிடிக்கச் சென்றான்.

புலவு நீங்குமுன் ''ஆசீதா இலட்சுமணா'' என்னும் அவலக் குரல் கேட்டுச் சீதை கலங்கினாள் இலக்குமணன் தமயனுக்கு என்ன நிகழ்ந்ததோ எனப பாரக்கப்போகாமல் நின்றது சீதையால் பொறுக்க வியலவில்லை.

''குற்றம் வீந்த குணத்தெங் கோமகன்
மற்றை வாளரக் கன்புரி மாயையால்
இற்று வீழ்ந்தன னென்னவு மென்னயல்
நிற்றியோ விளையோ யொருநீ யென்றாள்''

—சடாயு உயிர்நீத்த படலம்

''நீ ஏன் இராமனுக்குத் துணைபுரியப் போகாது நிற்கிறாய்?'' எனச் சீதை உரைத்தனளாக. ''கோமகன் அரக்கரை அழிப்பன், அபாயம் இல்லை; அஞ்சல்'' என்று இலக்குமணன் இயம்பினான். கீழ்வரும் செய்யுட்களில் சீதையின் மெய்யன்பு துலங்குதலைக் காண்க.

என்றவ னியம்பலு மெழுந்த சீற்றத்தள்
கொன்றன வின்னலள் கொதிக்கு முள்ளத்தள்
நின்றநின் நிலையிது நெறியிற் றன்றெனா
வன்றறு கண்ணினள் வயிர்த்துக் கூறுவாள்:
ஒருபகல் பழகினா ருயிரை யீவரால்
பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டுநீ
வெருவலை நின்றனை வேறென் யானினி
எரியிடை விழுந்துயி ரிறப்ப னீண்டெனா

—சடாயு உயிர்நீத்த படலம்

'இலக்குமண! உன் மனநிலை விளங்குகின்றிலது' எனச் சீறிய சீதை 'தீய்ப்புகுவன் என்றாளாக, இலக்குமணன் இராமனைத் தேடச் சென்றான்.

## சீதையின் பேச்சுவன்மை

இராவணன் முப்பகை தனையரி தவத்தவர் வடிவந் தாங்கி வீணையின் இசைபட வேதம்பாடுவான் தூமனத் தருந்ததி இருந்த சூழல் நண்ணினான். ஈண்டு இலங்கை

மன்னன் தன்பால் நியாயம் இல்லாத போதிலும் தான் சொல்வன நியாயத்துக்கும் பொருந்தும் வண்ணம் பேசுதலைக் காண்க. இலங்கை மன்னனுடைய பேச்சு வன்மையினும் சீதையின் பேச்சு வன்மை நனி துலங்குதலைக்கண்டு இன்புறுக. கற்பினுக் கணியைக் கண்ணின் நோக்கியவன் அவள் அழகினை வியந்து பார்த்ததற்கு ஆயிரம் கண் வேண்டுமென நினைத்தான். அவனை வரவேற்றுப் பிரம்பினாற் செய்த ஆசனத்தில் அமரும்படி வஞ்சகமில்லாத மனத்தினள் வேண்டினள். இப்பர்ணசாலை யாருடையதென வினவ 'உயர்குலத் தன்னை சொல் உச்சியேந்திரன் உறையும் இடம்' என விடை இறுத்தாள். அப்பொழுது "நீ யார் மகள்" என்னும் வினாவுக்கு விடையாகச் 'சனகன் மகள் காகுத்தன் மனைவி' என்றாள். "நீர் எங்கிருந்து வந்தீர்' என வினவலுற்றாளாக முனிவனாக வேடம் பூண்ட இராவணன் தன் பெருமையைக் கூறத் தொடங்கினான். "இந்திரனினும் மேம்பட்டவன், சுந்தரன், எல்லா உலகையும் ஆளும் மன்னவன்; அருமறை யறிந்தோன்; கைலாய கிரியை எடுத்தவன், திக்கயங்களை மருப்பொடித்தவன் எனயாவராலும் புகழப்படும் இலங்கை மன்னனுடைய பேரவையினின்றும் வந்தேன். மனக்கினியாள் ஒரு மாதர் நாடுவானுடைய பொன்னகரில் விரும்பி உறைந்து ஈங்குவந்தேன்" என்றான். இத்தருணத்தில் சீதையின் கூர்த்த மதி நனிதுலங்குதலைக் கண்டு மகிழ்க. "வேதியர் சூழலை விரும்பாமல் அரக்கருலகில் ஏன் வாழ்ந்தீர்" என எழுந்தது வினா "இஃதென்ன; அறநெறி நினைக்கிலாதவர்" இனத்திடை அருந்தவத்தினை உடையீர் வைகினீர்" என்றாள் சானகி மறுமொழியாக 'அரக்கர் தீயரல்லர், துறவிகளுக்கு நல்லார்' என உரைத்தான் அரக்கன். மாற்றுத்தரமாகத் 'தீயவர் சேர்தல் செய்தார் தூயவரல்லர்" என்றாள் அறநெறி யறிந்த அருந்ததியன்னாள். "அரக்கர் வல்லமை யுடையராக லின், அன்னாரைத் தழுவி நடத்தல் உலகியல் ஞானமாகும், என ஒரு நியாயம் பகர்ந்தான் முனிவனாகிய அரக்கன். "அரக்கரை அஞ்சவேண்டியதில்லை; அறத்தை நிலைநாட்ட வந்த வள்ளலின் வீரத்தால் அரக்கர் மாண்டொழிவர்' எனக் கிளந்தாள் அறத்தினரசி. 'மனிதரால் அரக்கரைக் கொல்ல வியலுமோ?' என அரக்கன் ஆட்சேபித்தானாக, 'விராதன் கரன் முதலியோரை மனிதர் கொன்றதை அறியீரோ? தருமத்தை வெல்லுமோ பாவம்' என மறுமாற்றம் மொழிந்தாள். அத்தருணத்தில் இராவணன் தன் வீரத்தை விவரித்தான். "இராவணனுக்கு ஒன்றும் அரிதன்று. மேருவைப் பறிக்க வேண்டினன், விண்ணினை இடிக்க வேண்டினன், நீரினைக் கலக்க வேண்டினன், நெருப்பினை அவிக்க வேண்டினன், பாரினை எடுக்க வேண்டினன், இராவணனே வல்ல

வன்' என்றான். நன்று நன்று அரக்கன் வீரம். இராவணனைச் சிறைவைத்த கார்த்தவீரியார்ச்சுனனைப் பரசுராமன் மழுவினால் எறிந்தான் அன்றோ'' எனச் சீதை சொன்னாளாக, மறுமாற்றம் சொல்லவியலாது திகைத்தான் இலங்கை மன்னன். மாயவேடம் விட்டுத் தன்னுருவை அரக்கன் காட்டினானாகச் சீதை நடுங்கினள். ''அரம்பையர் ஏவல் செய்ய இலங்கையில் உறைதி' என அரக்கன் வேண்டினான். நின் பேதைமை என்ன உயர் குலத்துக்குரிய ஒழுக்கத்தினை இழத்தல் உண்டோ? வில்வீரன் வருமுன் ஓடித்தப்பு'' என்றாள் கற்பினுக்கரசி'' நீ என் விருப்பத்திற்கு இசையாவிடின்யான் இறந்து படுதல் உண்மை ஆகலின் உயிரினை உதவிப் பெரும் பதங்கொள்க' என அடிவிழுந்திரந்தான் இலங்கை வேந்தன். தமியளாய் இருந்த சீதை என்செய்வாள் ''இறைவா, இளையோய்'' என அலறிக் கதறினாள். இராவணன் சீதையைத் தன் தேரில் இட்டுச் சென்றானாக, ''வீரன் என்றால் தேரைக்கடவல்' என்றாள் சானகி, ''தேரைக் கடாவாது நின்று மனிதரோடு பொருதல் இழிவாகு'' மென இயம்பி இராவணன் ஆகாயமார்க்கமாகச் சென்றான்.

## சீதையின் மனவுறுதி

இலங்கை மன்னன் சீதையை அசோகவனத்தில் சிறையிருத்தினான். தன் தீயொழுக்கத்தில் நாணமுற்று இராவணன் சீதையை அணுகிக் கூசிக் கூசியே தன் வேட்கையை உணர்த்தினான். ''பொற்கொழுந்தே! ஒவ்வொரு நாளாக, நாட்கள் பல வீணே கழிந்தன; காம நோயால் யான் இறந்த பின்போ என்னைக்கூட விருக்கின்றாய்; மூவுலகிலும் ஆணை செலுத்தும் யான் உன்பால் கொண்ட நோயால் மன்மதனோடு அமர் செய்து அழிகின்றேன். உன் காந்தன் காடு நீங்கி உயிர் பிழைத்து அயோத்தியடையினும் அவனோடு கூடி வாழ்தல் சிறப்பற்ற மானுட வாழ்க்கையாகும். நீ என்னுடன் வாழ்வாயானால், செல்வமுற்றுச் சிறந்து வாழ்வாய்; தேவர்களோடு பிரமலோகத்தில் இருத்தற்கே முனிவர்கள் தவம்புரிகின்றனர். அத்தேவர்களிலும் மேம்பட்ட என்னை நீ அங்கீகரிக்கின்றிலை. பல்வேறு நற்குணங்கள் உடைமையால் சிறந்திருந்தும் இரக்கமின்றி யிருக்கின்றாயே! இஃது என்ன! இது நிற்க. இளமை என்பது நிலையாது; சிறிது சிறிதாகக் கழியும்; கழிந்த பின் மீண்டு வராது, ஆகலின் இன்பந் நுகராமல் காலத்தை வீணே கழித்தல் அறிவின் பாற்படாது. நீ இரங்காவிட்டால் யான் இறந்து படுதல் திண்ணம். யான் இறந்தபின் உனது வரம்பில் பேரழகுக்குஏற்க நற்குணத்தாலும் காதலாலும் ஆடவன் யாவன் சிறந்து உளன் பெண்மையும் அழகும் படைக்கப் பெற்றாய் ஆயினும், கருணை அளிக்கப் பெற்றிலை'' ''ஆகசீதா

இலக்குமணா'' என இராமன் புலம்பி உயிர் நீத்தமை அறிந்தும் இராமனைக் காணலாம் என நம்பி யிருத்தல் பேதைமை. என்னைக் காதலித்துச் செல்வ முற்றிருக்கும் வண்ணம் ஊழ் வினை ஊட்டும் பயனைத் தவிர்த்தல் தகுதியோ? நீ இசையின் என் செல்வம் சிறப்படையும். அல்லாக்கால் என் உயிர் நாச மடையும். அப்போது அது உனக்குப் பழியாகும். தேவரும் சேவிக்கும் என்னைக் காதலியாது விலக்குதல் அறிவின் பாற் படுமோ?'' என்று பகர்ந்தான் இராவணன். தலையின் இரு கைகளையும் கூப்பி ''மூவுலகையும் ஆளும் என்னை ஆட்கொள் வாயாக'' எனச் சீதையின் தாள்களில் விழுந்து இரந்தான் இலங்கை மன்னன்.

எவ்வளவு சாதுரியமாக மனத்தை உருக்கும் வண்ணம் பேசியபோதிலும் சீதையின் மனத்தைக் கவர வியலாதிருந் தான் இலங்கையர் கோன் அவன் சீதையின் இலட்சியத்தை உணர்ந்திலன். இல்லற நெறியில் சிறப்புற்று நிற்றலே தேவி யின் வாழ்க்கை நோக்கம் என்பதையும் ஐம்புலவின்ப வாழ்க் கையைச் சீதை பொருட்படுத்திலள் அல்லள் என்பதையும் இராவணன் சிறிதும் உணர்ந்திலன். வேதகீதம் பாடிய போதி லும் இலங்கை மன்னன் உள நூலறிவும் ஒழுக்க நூலுணர்ச்சியு மின்றி உளத்தை உணரும் ஆற்றல் இல்லாதிருந்தனன் என அறிக, இது நிற்க.

அரக்கனுடைய உரை கேட்ட சீதை சினந்து பின்வரு மாறு இராவணனை இகழ்ந்து பேசினள் ''துரும்பே! உன் சொற்கள் இல்லறத்தில் இருப்போருக்கு ஏற்காதவை. கற்பே மகளிர்க்கு அணிகலம்; இராமனுடைய ஆற்றல்களை அறிந் திருந்தும் தகுதியற்ற வார்த்தைகளைப் பேசி உயிரிழக்க விரும்புகிறாயே. நீ கோழை யனைகையினாலேயே, வஞ்சனை யால் இராம லட்சுமணர் இல்லாத சமயத்தில் என்னைக் கவர்ந்து சிறையிட்டாய். நீயும் உன் குலமும் கெடும் எனச் சொல்லவும் வேண்டுமோ? சடாயு வால்அடிபட்டு மூர்ச்சை யடைந்த நீ இராமனோடு போர் செய்ய வல்லவனாவாயோ? உன்வர பலமும் தேகபலமும் விளக்கின் முன் இருள்போல் இராமன் முன் அழிவெய்தும் திக்கயங்களை மருப்பொடித்தாய் என வீரம் பேசுகின்றாய், இளையானை அஞ்சியே வஞ்சனை இழைத்தாய். இராமன் மானுடனாயினும், உன் போராற்றல் அவனுடைய போராற்றலுக்கு நிகராகுமோ. என்னே! உன்னைக் குருதிகக்கப் பிடித்துச் சிறையிட்ட கார்த்தவீரியார்ச்சுனனைப் பரசுராமன் கோடரியால் கை தரித்தனன் அன்றோ. அன்னானை வணங்கச் செய்த இராமனை நீ வெல்லுவாயோ? துணைவரின்றி இருவர் என் செய்வரெனின், ஒருவரே உலகை அழித்தல் அறியாயோ? இது நிற்க. இரணியன் முதலியோர் அறநெறி

தவறிய போதிலும் பிறர்மனை நயந்து இழிவடைந்தார் அல்லர் நீயோ யாவரிலும் இழிந்த ஒழுக்கமுடையாய் நீ கெடுவது உண்மை. காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குறும்பை ஒழித்தவரே பிறவிக்கடல் நீந்துவர். உன் ஒழுக்கம் அடாது என இடித்துரைக்கும் அமைச்சர் இலங்கையில் இல்லைப் போலும். இனி முனிவரின் வேண்டுகோளுக்கு இசைந்து தீயோரை அழித்தலே தன் வாழ்க்கை நோக்கமாக இராமன் விரதம் பூண்டதை யான் அறிவேன். உங்கை மூக்கிழந்தனள் அல்லளோ? கரன் முதிலியோர் தாள்கள் துண்டம் துண்டமாக வீழ்ந்தன அல்லவோ? இனியாயினும் பிழைக்கும் வழி தேடுநீ" என மொழிந்தாள் கற்பினுக்கு அணியாவாள்.

இலங்கை மன்னனுக்கும் இராமன் தேவிக்கும் இடையில் நிகழ்ந்த வாதத்தில் மன்னன் பெருந்தோல்வி யடைந்த போதிலும் தோல்வியைக் காட்டாது வீரவார்த்தை பேசுதலைக் காண்க.

இலங்கை மன்னனுக்கும் இராமன் தேவிக்கும் இடையில் நிகழ்ந்த வாதத்தில் மன்னன் பெருந்தோல்வி யடைந்தபோதிலும் தோல்வியைக் காட்டாது வீரவார்த்தை பேசுதலைக் காண்க.

இத்தகைய பேச்சைக் கேட்ட இராவணனிடம் காமத்திலும் சீற்றம் தலையெடுத்தது. அவன் தெழித்து உரப்பினன் சீதையைத் தின்பேன் என்று உடன் றெழுந்தான். பின்பு காமந்தலையெடுக்கச் சினந்தணிந்து சில உரைத்தான். "என் வீரத்தை இகழ்ந்தனை நன்று எனக்கு இயலாத காரியம் இல்லை நீ உயிர் விடுதல் கூடுமென அஞ்சியே உன்னை வஞ்சனையால் கைப்பற்றினேன். மாயமான் என உணரமாட்டாத மானுடரோ தேவர் அஞ்சும் என்னிடம் இருந்து உன்னை மீட்க வல்லவர். என்னை வென்றோர் இருக்கட்டும். தேவர்கள் என் ஏவல் செய்கின்றார்களே இராம லட்சுமணரை இங்கு கொணர்ந்து பணிசெய்ய வைக்கின்றேன் பார். உன் பொருட்டு அவர்களைக் கொல்லாது விட்டேன்; நீ இணங்காவிடின், அவர்களைக் கொல்வது நிச்சயம்; இரண்டு மாதங்களில் நீ என் விருப்பத்துக்கு இசையாவிட்டால் உன்னையும் கொல்வேன்" என உரப்பிச் சென்றான் இராவணன்.

### சீதையின் கவலை

தான் கண்ட மயிலையும் குயிலையும் மானையும் தன் அவல நிலையை இராமபிரானுக்கு அறிவிக்கும்படி இரந்துசென்ற சீதை அரக்கரூராகிய இலங்காபுரியில் தனக்கு யாது நிகழுமோ என அஞ்சினாளல்லள். தன்னுயிரை இழத்தலோ

என்பவற்றைப் பற்றிய சிந்தனை சீதையிடம் எழுந்ததில்லை எனலாம். எல்லையின்றிப் பெருகுகின்ற கண்ணீரில் மூழ்கியிருந்தாள் மிதிலை யரசிளங்குமரி; தான் உற்ற இடரால் கவன்று துயிலின்றிக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தாள்; புலிக் குழாத்திடை அகப்பட்ட மான்போல அரக்கியர் மத்தியிலிருந்து நடுங்கி உயிர்த்தாள், கீழேதரப்படும் செய்யுள் சீதையின் அழுகையை இனிது புலப்படுத்தும்.

விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை யெண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந் துயிர்த்தல்
அழுதல் அன்றிமற் றயலொன்றுஞ் செய்குவ தறியாள்.

காட்சிப்படலம்,

தன்கொழுநனுக்கு என்ன நிகழ்ந்ததோ அவன் மனநிலை யாதோ என்று ஏங்கி அழுதாள். உடுத்த துகிலோடு தண்ணீரில் மூழ்காமல் மாசடைந்த மேனியளாய்ச் சாம்பி மெலிந்திருந்தாள் அத்தருணத்தில் ஒன்றன்பின் ஒன்றாகத்தன் கொழுநனின் நற்குண நற்செய்கைகள் அவள் மனத்தின்கண் எழுவனவாயின.

இலக்குமணன் தமையனைச் சந்தித்தானா எனவும் இருவரும் தன் சிறையிடம் அறியாது தேடுகின்றனரோ எனவும் அயிர்த்தாள். சீலத்தால் சிறப்பெய்த எருவை வேந்தன் மாண்டமையால் தன்நிலைமையைச் சொல்வோர் ஒருவரும் இல்லையே எனக்கவன்றாள்; கையற்ற நிலையில் என்செய்யலாம் எனக் கலங்கினாள். இலக்குமணன் கூறிய புத்தியுரையைக் கேளாமையால் அறிவிலள் என்னத்தன் உளத்துறந்தானோ தன்கொழுநன் என ஏங்கி அழுதாள். அடுத்தபொழுது தன்துயர் மறந்து தன்கொழுநன் கானகத்தில் உணவு அளிப்பாரின்றி இருத்தல் கூடுமென நினைந்து இரங்கினாள். ஒருவேளை அரக்கர் தன்உனத்தின்று விடுதல் கூடுமாதலின், தேடுதலில் பயனில்லைஎன இராமலட்சுமணர் தேடாதிருக்கின்றனரோ எனச் சீதை ஐயமுற்றாள். தாயாரும் தம்பியரும் மறுபடியும் கானகம் வந்து அயோத்தி திரும்பும்படி அழைத்தாலும் அவர் சென்றுளரோ என நினைந்தாள்; அங்ஙனமாயின், இலங்கை நோக்கி வருங்காலை கரன் போன்ற வல்லரக்கர் எதிர்த்தனரோ என எண்ணினள். இவ்வண்ணம் மயங்கி அழுது கொண்டிருந்தாளாக அவள் இருந்த இடத்தில் கறையான் புற்றெடுத்து மூடின. சீதை இவ்வண்ணம் புடைபெயராதிருந்துதன் கொழுநனையே சிந்திப்பாளாயினள். இதுநிற்க.

இன்பத்தில் இன்புறுமலும் விருப்பு வெறுப்பின்றிப் பற்றற்றான் பற்றினைப் பற்றி முகமலர்ச்சியோடு இருக்கும இராமனையே எப்பொழுதும் சீதை உன்னினள். வில்லார் தோள்களைப் பிரிந்தேனே என அவலித்தும் மிதியிலையில் நடந்த அம்மிதித்தல் முதலிய மனச் சடங்குகளை நினைத்தும் இரங்கினள். பரசுராமன் வளைக்க இயலுமாயின் வளைக்க எனக் கொடுத்த வில்லை வளைத்து வணக்கம் பெற்ற வல்லமையைப் பாராட்டி அழுதாள். காடேகுங்காலை தானங் கொடுத்து முடிந்தபின் வந்த வேதியனுக்கு எஞ்சியிருந்த பசுக்களை அளித்த வள்ளன்மையைப் புகழ்ந்து அழுதாள். கங்கைக் கரையில் ஏழைவேடனைத் தன் தம்பியெனத்தழுவிய பெருந்தகையை இழந்தேனே எனப் புலம்பினாள்; விராதன் தோளை வெட்டி வீழ்த்திய வீரனைக் காணேனே எனக் கவன்றாள்.

இவ்வண்ணம் யாதொரு துணையுமின்றி நிறையே துணை யாக இருந்து அரற்றி அழுது வருந்துவாளின் இடக்கண் துடித்தது. தம்விருப்பம் நிறைவேறும் என வலியுறுத்தும் நிமித்தம் நிகழுமாயின், அந்நன்னிமித்தத்தை நம்புதல் மக்கள் இயற்கையே. சீதையும் அசோகவனத்தில் உற்றாரும் உறவினரும் இன்றியிருந்து தன் உயிர்த் துணைவனைக் காண லாகுமோ என அலமந்தாள். தன்னுயிரினும் இனிய கொழு நன் மீட்கவருதல் கூடுமென நினைந்த போதிலும், கவலையும கண்ணீரும் நீங்கிற்றில அருளியோன் அறத்தை நாட்டுதல் இயலாதாகின், தன் அன்பிற்குரியாளை மீட்டே தீர்வான் என நம்பியே கற்பினுக்கு அரசி தன்னுயிரை வைத்திருந்தனள் என்க. எனினும் பிறர் மனையில் தான் இருந்த பழி தன் கொழுநனைத் தொடரும் என அஞ்சிய சீதை தற்கொலை புரி தலே அறத்தாறு எனத்துணிந்து ஒரு மாதவிப் பொதும்பரை எய்தினாள்.

## சீதையின் அரக்கற்பு

தன் வீரத்தையும் ஆணையையும் புகழ்ந்துரைத்துச் சீதை யைத் தன்வயப்படுத்த எண்ணிய இலங்கையர்கோன் தன் எண்ணம் கைகூடவில்லை என உணர்ந்தான். பின்பு சீதை யின் கையற்றநிலையை விளக்கித் தன் விருப்பத்திற்கு இசையப் பண்ணலாமென எண்ணினான். தன் துணையற்ற நிலையைச் சிந்தியாது அறத்தின் வழிநின்ற சீதை, இலங்கை மன்னனுடைய சீர்கெட்ட ஒழுக்கத்தினை இகழ்ந்தாள். இராவணன் சீதையின் மனததைத் திருப்பவியலாது கவன்றான். அச்சமயத்தில் மகோதரன் ஒரு தீய ஆலோசனை சொல்ல, இராவணன் அவன் கூறும் வஞ்சனையால் சீதையை இசையப்பண்ணலாம் எனநம்பினான்.

இலங்கைமன்னன் அசோகவனத்தை அடைந்து சீதையிடம் குறையிரந்தான். அப்பொழுது சீதை தன்மனக் கருத்தை வெளியிட்டாள். "யான் உயிர் வீயாமல் இருத்தல் செல்வத்தையும் இன்பத்தையும் அநுபவித்தற்கு அன்றி, என் ஆசையின் கனியைக் காணுதற்கே என்பதை நீ உணர்கின்றிலை. இராமன் உயிரே என் உயிர்; எனக்கு வேறோர் உயிர் இல்லை. அப்பொழுது இராவணன் இராமனால் தன்னை வெல்ல வியலாதென்பதை நிலைநிறுத்த முயன்றான். "இராமன் உன் உயிருள் நுழைந்து மறைந்திருந்தாலும் யான் அவனைக் கொல்வது திண்ணம். இராமனைக் காணலாம் எனவும் உன் காந்தனோடு இனிது வாழலாம் எனவும் நம்பியிராதே: குரங்குகள் கடலை அணைகட்டி இலங்கை மதிலை வளைத்து ஆரவாரிக்கின்றன வாகையால் இராமன் வெல்வான் என எண்ணாதே என்பகைவர் விளக்கெதிர்வந்த விட்டில்போல் எண்ணிய மாத்திரத்தில் அழிவெய்துவர். அதுநிற்க அயோத்தியிலுள்ளவரையும் மிதிலையிலுள்ளாரையும் கொன்றுவரும்படி வீரரை ஏவியுள்ளேன் என அறிவாயாக" என்றான் இராவணன்.

சீதை அதுகேட்டுத் துயருற்றாள். அறநெறி நிற்போருக்கு இவ்வுலகில் உய்வில்லை என நினைத்து உலகவாழ்வை வெறுத்தாள். அத்தருணத்தில் மகோதரன் மாயாசனகனைக் கட்டி இழுத்து அவர்கள் முன்னிலையில் கொணர்ந்தான் தன் தந்தை சிறைப்பட்டதைக்கண்டு சீதை நிலத்தில் விழுந்து புரண்டு புலம்புதலைக் காண்க.

தெய்வமே யென்னு மெய்ம்மை சிதைந்ததோ வென்னுந் தீய
வைவலோ வுலகை யென்னும் வஞ்சமோ வலிய தென்னும்
உய்வலோ இன்ன மென்னு மொன்றல துயர முற்றாள்
தையலோ தரும மேயோ யாரவர் தன்மை தேர்வார்.

—மாயா சனகப்படலம்

"தெய்வமே, அறம் அழிவெய்தியதோ? மறக் கற்பின் வலிமையால் இவ்வுலகை எரித்து விடட்டுமா? வஞ்சகமே இவ்வுலகில் தலையெடுக்கின்றது. எந்தையே, என்பொருட்டால் நீ இந்நிலை அடைந்தாயே" எனச்சீதை அரற்றினள். "என்னை விடுதலை செய்வானைக் காணேன், உன்னைச் சிறையில் இருத்தியயானும் உயிர்வாழ்கின்றேனே" எனக் கவன்றாள் சீதை.

இன்னணம் கலங்கிய சீதையைத் தேற்றி இணங்கச் செய்யலாமென எண்ணிய இராவணன் இனைய சொன்னான். உன்மீது யான்கொண்டுள்ள அளப்பருங்காதலால் உந்தையை இடருறுவித்தேன்; பொருத்தி; அஞ்சல்; என் காமவெந்நோய் துடைத்தியேல், மூவுலகாட்சியும் சனகனுக்கு அளிப்பேன்; சுந்தரப்பவள வாயால் ஒருமொழி சிறிது சொல்லுவாய்"

இவற்றைக்கேட்டுக் கலங்கி நடுங்கிய நிலையிலும் சீதையின் அகத்தில் அறம் தெளிந்து துலங்கிற்று. கற்பின் மகிமையால் வீரபத்தினியாயினள் எனலாம். "இராமன் உன்னைக் கொல்லுங் காட்சியைக் காண விரும்புகின்றேன்" என்றாள் சீதை. ஈண்டு மறக்கற்பினும் அறக்கற்பு மிளிர்தலை உய்த்துணர்க. அப்போது இராவணன் சினந்து, சீதையை அணுக மகோதரன் விலக்கினான். "சனகன் புத்தி சொன்னானாயின் சீதை இசைவாள்' என மகோதரன் சொன்னதை, "என் உயிரைக் காத்தற்கு அமரருக்கு அரசனாவான் தேவியாதல் தீதோ" என மாயாசனகன் விளம்பினான். "இத்தகைய உரையை ந்தை கூறான்; எந்தையே, அறநெறி விலகியான் வாழ மாட்டேன்; என் உயிரினும் இனிய உன்னுயிரைக் காத்தலும் அறநெறி நிற்றலே சிறந்தது; இராமன் மீட்டால் உயிர் வாழ்வோம்; அன்றேல் இறத்தலே நன்று" எனச்சீதை உறுதியோடு சொன்னாள். சீதையை அச்சுறுத்தும் நோக்கத்தோடு சனகனைக் கொல்லச் சுரிகையை உருவினான் இராவணன். அத்தருணத்தில் சீதையின் அறக்கற்பு சிறந்து மிளிர்ந்தது. மதிலையரசி கடவுள்மீது முழுநம்பிக்கையுடைய வளாதலின் உறுதி கொண்டாள். பித்தேறியவள்போல் சீதை சொன்னாள். "உன்னால் ஒருவரையும் கொல்ல இயலாது; தீயோனாகிய உன்னை இராமன் கொல்வான் சீதையின் அறக்கற்பை அநுமன் பாராட்டுதலை ஈண்டுச் சிந்திக்க.

"விற்பெருந் தடக்கை வீர வீங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லேன்
இற்பிறப் பென்ப தொன்று மிரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றுங் களிநடம் புரியக் கண்டேன்

—திருவடிதொழுத படலம்

---

## கையறவு

கரந்தைத் தமிழ்ச் சங்க உறுப்பினரும் செயற்குழு உறுப்பினருமாக அமர்ந்து சங்கமும் கல்வி நிலையங்களும் வளம்பெற்றோங்க உள நிறை மகிழ்வாலும் ஊக்கத்தாலும் சிறந்து பணியாற்றியவரும், தஞ்சை வணிகப்பெருமக்களுள் ஒருவருமான செந்தமிழ் அன்பர் திரு. ம. ந. கொண்டல் நாயுடு அவர்கள் 19—8—64 எதிர்பாரா நிலையில் இயற்கை எய்தியமை கேட்டுச் சங்கத்தார் பெரிதும் துயர்கூர்ந்தனர். அன்னார் மறைவு வணிக உலகத்திற்கும் சங்கத்தாருக்கும் ஒரு பேரிழப்பாகும். அவர்தம் மறைவுகருதி வருந்தும் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் சங்க அன்பர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த துயரத்தினை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பொழிற்றொண்டர்.

# பாத்திரப் படைப்பு

ச. செந்தில்நாதன்

பாத்திரப் படைப்பு, புதினங்களுக்கும் பெருங் காப்பியங்களுக்கும் ஓர் அணிகலனாகும். ஆழமான கருத்து இல்லாவிட்டாலும், வளமான கற்பனை இல்லாவிட்டாலும் புதினத்திற்கும் காப்பியத்திற்கும் இலக்கிய மதிப்புத் தேடித்தரும் ஓர் கருவியாகும். மனித சமுதாயத்தில் காணப்பெறும் பல்வேறுபட்ட குணங்களின் சின்னமாகும். இலக்கிய ஆசிரியனின் ஆற்றலுக்கும், கற்பனைக்கும் தக்க சான்றாகும். இலட்சிய எழுத்தாளனின் இதயத்தைக் காட்டும் கண்ணாடியாகும். சில குணங்களையும் சில உணர்வுகளையும் நினைவுபடுத்திப் பார்த்தாலே, சில பாத்திரங்களின் தோற்றம் நம் கண் முன் எழும். கற்பை நினைத்தால் கண்ணகியும், கலையை நினைத்தால் கோவலனும், வஞ்சத்தை நினைத்தால் குடிலனும், வில்லாண்மையை நினைத்தால் அருச்சுனனும் நம் நெஞ்சத்தில் உடனே தோன்றுவார்கள். சில குணங்களை நினைத்தால் சில பாத்திரங்களும், சில பாத்திரங்களை நினைத்தால் சில குணங்களும் நம் நினைவிற்கு அடிக்கடி வருகின்றன. இதற்குக் காரணம் என்ன? சிறந்த பாத்திரப் படைப்புத்தான் இதற்குக் காரணமாகும்.

கற்பு என்றாலே கண்ணகி தோன்றுகிறாள். காரணம்? கற்பின் முழு உருவமாக—கற்பின் எல்லையாகக் கண்ணகி படைக்கப்பட்டிருப்பதுதான். கற்புள்ள ஒரு பெண் எப்படி எப்படியெல்லாம் இருக்க முடியும் என்பதற்கு ஒரு வரையறையை கண்ணகியின் பாத்திரம் காட்டுகின்றது. பொதுவாக, உலக இலக்கியங்களில் காணப்பெறும் தலை சிறந்த பாத்திரங்களெல்லாம், ஒரு குறிப்பிட்ட சில குணங்களின் எல்லையே என்று சொன்னால் மிகையாகாது. அதற்காக, அச்சம் என்றால் மிகமிக அஞ்சுகின்ற ஒரு பாத்திரத்தையும், ஆணவம் என்றால் மிகத் 'திமிர்' பிடித்த ஒரு பாத்திரத்தையும் படைத்து விட்டால், அவையெல்லாம் சிறந்த பாத்திரப் படைப்பு என்று பொருள் கொள்ளக் கூடாது. ஏனெனின், பாத்திரப் படைப்புக் கலையின் நுணுக்கத்தையும் உணர்ந்து, பாத்திரங்களை உருவாக்கினால்தான் அவை "உண்மைப் பாத்திரங்"களாக இருக்க முடியும். கண்ணகியைக் கற்பரசி என்று காட்ட, இளங்கோவடிகள் எத்தகைய முறைகளை எல்லாம் கையாளுகின்றார் என்பதைக் கற்றோர் நன்குணர்வர்.

இலக்கியம் என்றாலே. அது சமுதாயத்தின் மறுபதிப்பாகத்தான் இருக்கவேண்டும் என்று "முடிவு" செய்துவிட்ட

சிலர், இத்தகையப் பாத்திரப் படைப்பினைச் சிறந்த முறையல்ல என்று கூறி மறுக்கலாம். "சமுதாயத்தில் நடமாடுகிறவர்கள் எல்லாரும் சாதாரண மனிதர்களே எனவே, புதினங்களில் படைக்கப்படும் பாத்திரங்களும் சாதாரண மனிதனின் "நிழற்பட" மாகத்தான் இருக்கவேண்டும்; சாதாரண குணங்களே அதில் காணப்பட வேண்டும்" என்று சிலர் கருதலாம்.

நாட்டில் எத்தனையோ மனிதர்கள் பிறக்கிறார்கள்; இறக்கிறார்கள். ஆனால் அத்தனை மனிதர்களுமா மக்கள் மனத்தில் வாழ்கிறார்கள்? காந்தியடிகள்போல் விடுதலை வாங்கித் தந்தவர்களும், நேருபோல் நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைத்தவர்களுமே, நாட்டு மக்களின் நெஞ்சத்தில் நிலைபெறுகின்றனர். ஏன்? அவர்கள், சமுதாயச் சாலையில் நடக்கும் சாதாரண மனிதர்களைவிட உயர்ந்தவர்கள்; சாதாரண மனிதனைவிடப் பல வகையிலும் வேறுபட்டு வாழ்ந்தவர்கள்.

இந்த உண்மையைப் புதினங்களுக்கும் பொருத்திப் பார்த்தால் தெளிவு பிறக்கும். இலக்கியம் வாழ்வைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற "ஒரே" காரணத்திற்காகப் படைக்கப்படும் பாத்திரங்களை, நாம் மறந்து விடுகின்றோம். ஆனால், சாதாரணப் பெண்ணைவிடப் பல வகையிலும் உயர்ந்த கண்ணகியை நாம் மறப்பதில்லை—அதாவது காந்தியடிகள் நேருவை மறக்காதது போல்.

இதனால், பாத்திரப் படைப்புச் சிறப்புடன் அமைய வேண்டுமெனில், பாத்திரங்களெல்லாம் "மனிதருள் மாணிக்கமாக" இருக்கவேண்டும் என்று பொருளல்ல. தீக்குணம் நிறைந்த குடிலனும் சிறந்த பாத்திரப் படைப்பேயாம். சாதாரண மனிதன் அல்லது பாத்திரம் என்று கூறும்போது குறிப்பிடத் தகுந்தாற்போல் எதுவும் இல்லாத பாத்திரம் என்றே பொருள் கொள்ளவேண்டும். பாத்திரத்தின் தன்மை எப்படிப்பட்டதாக இருந்தபோதிலும், அது முழுமை பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பிடத் தகுந்தாற்போல் எக்குணமும் இல்லாமல், சாதாரண இயல்புகளுடனும் சிறந்த பாத்திரம் உருவாக முடியும். ஏனெனில், குறிப்பிடத்தகுந்தாற்போல் எக்குணமும் இல்லாத நிலையும்—சாதாரண இயல்பும் ஒரு வகைக் 'குணம்' தான். அந்தக் குணத்தின் எல்லையாக (அதாவது கற்பின் எல்லையாகக் கணணகியிருப்பது போல்) முழுமையுடன் ஒரு பாத்திரம் உருவாக முடியுமானால், அப்பாத்திரமும் சிறப்புடன் அமையலாம். சான்று என்ற அளவில் ஒன்று சொல்ல வேண்டுமானால், வேதநாயகம் பிள்ளையின்

"பிரதாப முதலியாரை"க் குறிப்பிடலாம். பிரதாப முதலியார் மிகச் சிறந்த பாத்திரப்படைப்பு அல்ல என்றாலும், சான்று காட்ட ஓரளவு ஏற்றதேயாகும்.

எழுதுகின்றவர்கள் எல்லாரும் "வெறுங்கற்பனை"யையே நம்பிக் கொண்டிருப்பவர்கள் அல்லர். அல்லது வாழ்வில் கண்ட சில நிகழ்ச்சிகளுக்கு ஒரு அமைப்புத்தந்து கொண்டிருப்பவர்கள் அல்லர். கலை. கலைக்காக என்ற போர்வையில் ஒளிந்து கொண்டு, 'கண்டபடி' எழுதுகின்றவர்கள் அல்லர். கொள்கைக்காக எழுதுகின்றவர்களும் சிலர் உண்டு, கருத்தினை விளக்குவதற்காகப் பாத்திரம் படைக்கின்றவர்களும் உண்டு. சான்றாக. ஆங்கில இலக்கியத்தில் பெர்னாட்சாவையும், தமிழில் டாக்டர் மு. வ. வையும் கூறலாம்.

பொதுவாக, கருத்துக்காக எழுதப்படும் புதினங்களில் பாத்திரப்படைப்பு சிறப்புடன் அமைவது அரிதாகும், ஏனெனில், பாத்திரப் படைப்பை விடக் கருத்துக்கு முக்கியத்துவம் இப்புதினங்களில் அதிகம் தரப்படுகின்றன. இந்த உண்மையை, மு. வ. வின் புதினங்களுடன் 'கல்கி'யின் புதினங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் அறிந்து கொள்ளலாம். கருத்துப் புதினங்களில் பாத்திரப் படைப்பு சீரிய முறையில் அமையாதது ஒரு குறையல்ல; புதின ஆசிரியர்க்கும் அது இழுக்கல்ல. பாத்திரப் படைப்புப் புதினத்திற்கு ஒரு அணிகலன். அந்த அணிகலன் இல்லாமலும் புதினம் சுவையுடன் இருக்கமுடியும்.

இதுகாறும் கண்டவற்றால், பாத்திரப்படைப்பின் சிறப்பையும், குணத்தின் முழுமை—எல்லையே அக்கலையின் நுணுக்கம் என்பதையும், கருத்துப் புதினங்களுக்குப் பாத்திரப் படைப்புச் சீரிய முறையில் அமையாதது இழுக்கன்று என்பதையும் அறிந்து கொண்டோம்:

---

தமிழகப் புலவர்குழு 16 வது கூட்டம் 1964 செப் 19,20 இல் திருப்பதியிலும் திருமலையிலும் கூடுகிறது. 20ஆம் நாள் தமிழகச் சட்டமன்றத்தலைவர் திரு. S. செல்லபாண்டியன் பி.ஏ, விழாவைத் தொடங்கிவைப்பார்கள். திருப்பதி பல்கலைகழகம் விருந்து முதலியன நிகழ்த்துமென திரு. கி.ஆ பெ. விசுவநாதம் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

---

திருத்தம்:— துணர் 40 மலர் 5. பக் 136 ல் அடிக்குறிப்பில் தொல்காப்பியனுர் "இல்" என்பதை ஏழாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிட்டிலர். எனத் திருத்திக் கொள்க.

# விழாக்கள்

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் கழக 27 ஆம் ஆண்டுத் தொடக்கவிழா 3—8—64 திங்கள் மாலை 4-30 மணியளவில் திரு. T. M. மீனுட்சிசுந்தரனுர் பி. ஏ. (தஞ்சைமாவட்டத் தலைவரின் உதவியாளர்). அவர்கள் தலைமையில் நடந்தது.

அதுபோது கல்லூரித்தலைவர் திரு. சுயம்பிரகாசம் பி.ஏ. பி. எல்., அவர்கள் அனைவரையும் வரவேற்றுச் சங்கப்பணி—கல்லூரித் தொண்டு—மாணவர்கழக நோக்கம்பற்றி எடுத்துக் கூறினுர்கள் விழாத் தலைவர் தமிழ்ச் சிறப்புப்பற்றி முன்னுரையில் மொழிந்தார்கள். பின் காஞ்சி பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. மா. கி. தசரதன் எம்.ஏ., அவர்கள் தமிழன்கண்டபுறம் என்ற தலைப்பில் தமிழரின் சீரிய புற வாழ்வைப் பற்றி வகைபட மொழிந்தனர். பின் திருக்காட்டுப் பள்ளி சிவசாமி ஐயர் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திரு.வே. கோபாலையர் எம்.ஏ. தொல்காப்பியம் என்ற தலைப்பில் நூலின் தொன்மையும் அமைப்பும் அழகும் பற்றி எடுத்துரைத்தார்கள், தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் சுந்தரேசன் நன்றி கூறத் தமிழ் வாழ்த்துடன் விழா நிறைவேறியது.

உமா மகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கிய மன்றத் தொடக்கவிழா 7—8—64 ஆம் நாள் தஞ்சை சரபோசியரசர் கல்லூரிப் பேராசிரியர் திரு. R. சேசாலம் எம். ஏ., அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. பள்ளித்தலைவர் திரு. சாமி பஞ்சநதம் எம்.ஏ,எல்.டி., அவர்கள் அனைவரையும் வரவேற்றுர்கள். விழாத்தலைவர் இலக்கியச் சிறப்புப்பற்றி முன்னுரையில் மொழிந்தார்கள். பின் முன்னணிச் சிறுகதை எழுத்தாளர் த. செயகாந்தன் அவர்கள் இலக்கியம் எதற்கு என்றதலைப்பில் மக்களை உயர்த்தி ஆன்ம நலத்தையும் ஒழுக்கத்தையும் ஊட்டி மக்களோடு தொடர்ந்து நிகழ்வனவே இலக்கியம். மயக்கத்தைச் செய்யும் போலிகளை இலக்கியமாக எண்ணும் நிலை அகன்று வளரும் சமுதாயம் வாழ்விலக்கியங்களைப் படைக்க வேண்டுமென்று உணர்ச்சியோடு பேசினுர்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் தமிழாசிரியர் மீ. இராமதாசு அவர்கள் நன்றிகூறத் தமிழ்த் தாய் வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

பொழிற்றெண்டர்.

# வெள்ளித் திருமுற்றம்

வித்துவான், சி. கோவிந்தராசனார் (கரந்தை)

திருச்சிராப்பள்ளியிலிருந்து வடக்கே சென்னைக்குச் செல்லும் தலைமைச் சாலையில் அடுத்துள்ளது திருவானைக்கா என்னும் சிற்றூராகும். இங்குள்ள சம்புகேசுவரம் என்னும் புகழ்பெற்ற சிவன்கோயிலைச் சுற்றிலும் வேறெங்கும் இல்லாத அளவிலும் முறையிலும் பெருமதில் எடுக்கப்பட்டுள்ளது. இப்பெருமதிலின் வடக்குப்புறமாக கோயிலுக்குரிய நன்செய்கள் உள்ளன. இந்நிலப்பகுதிகளை வளைத்து எல்லை கோலியதைப் போன்று கருங்கற்களை அடுக்கிய முறையில் நெடிய சுவரொன்று நெளிந்தோடுகின்றது. இச்சுவரினைச் சார்ந்து வடக்கே, பலவகை மரங்கள் செறிந்த சோலையொன்று திட்டாகவுளது. சோலையின் நடுவே பாழடைந்த மண்டபமொன்று நிற்கின்றது. அளவில் பெரியதாக நிற்கும் இம்மண்டபம் நூற்றிருபதடி நீளமும், எண்பதடி அகலமும் கொண்டதாக இருபதடி உயரமாகவும் சிற்ப வேலைப்பாடுகளுடன் இலங்குவதாகவும் உள்ள தூண்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. நாயக்கர் காலத்திற்கே உரிய கலசப் போதிகையின் மேல் துலாநிலைக்கல் இணைப்பிட்டு, பாறைப் பலகைகளால் கூரை அடைக்கப்பட்டுள்ளது. தூண்களுள் சிலவற்றில் நாயக்க மன்னர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கீழ்த்தளம் நடுவில் முற்றமாகவும், சுற்றிலும் தாழ்வாரப் பத்தியாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய அமைப்புடைய மண்டபத்திற்கு மேற்புறம் சிறிய வடிவில் கருவறையொன்று தனித்துப் பொருத்தப்பட்டுளது. திருமேனியொன்றும் மண்ணளைந்த நிலையில் காட்சியளித்தது. மண்டபத்திற்கு முன்னர்; சிறிய வடிவில் படித்துறையுடன் கூடிய திருக்குளமும் கரையில் நான்கு கால் மண்டபமும் புதர்களிடையே தோற்றமளித்தன.

பழமைக்குரிய பாங்கெல்லாம் ஒருங்கே நிறைந்தும், காலத்தால் பாழடைந்து கிடக்கும் இப் பகுதியைக்கண்ட எனக்கு, தனித்திருத்தலால் அச்சமும், மண்டபம் ஆகியவற்றைப் பற்றிய வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டுமென்னும் ஆர்வமும் ஒருங்கே எழலாயிற்று. எனவேகல்வெட்டுககள் இருப்பதாயின் அறியலாமென்று ஆராயலானேன். முயற்சி வீண் போகவில்லை. குளக்கரை நாற்கால் மண்டபத்திற்கு வடபால், பழம் பொருள் ஆய்வாளர் பார்வைக்கு இலக்காகும் கருங்கற் பலகையொன்று நின்றது. நாலரை அடி உயரமும், இரண்டடி அகலமும், பத்து அங்குலத் தடிப்பும் உடையதாக நடப்பட்

டுள்ள இப்பலகைத் தூணின் ஒருபுறம் நுட்பமான சிற்ப வேலைப்பாடு நிறைந்திருந்தது. மறுபுறம் கல்வெட்டொன்று காணப்பட்டது. கல்வெட்டில்,

"ஸ்வஸ்திஸ்ரீ வெள்ளித் திருமுற்றமான ரதகரர் விண்ணகர நாயனார் முழுதும் வல்லவன் தம்பிரான் இத்தர்மம் மதி கெட்டுனும் (நாட்டினேம்) இரத கரர் ரக்ஷை உ."

என்ற செய்தி வெட்டப்பட்டுள்ளது. கல்லைப் புகைப்படமெடுத்தோடு, அதிலுள்ள சொற்களையும் படியெடுத்துக் கொண்டு, ஆனைக்காவினையடைந்து, அம்மண்டபத்தினைப் பற்றி வினவியறிந்த போது, மண்டபம் அரசி மங்கம்மாளின் பெயரால் அறச்செயலுக்குரித்தான தென்பது புலனாயிற்று. மண்டபமும் மங்கம்மாள் மண்டபமென்று பெயர் பெற்றிருந்திருக்கிறது.

இச்சிறு செய்தியையும் கல்வெட்டுச் செய்தியையும் கொண்டு அப்பகுதியினைப்பற்றிய வரலாற்றின் ஒரு பகுதியினை ஒருவாறு அறியலானேன். மண்டபமுள்ள பகுதி வெள்ளித் திருமுற்றமான இரதகரர் விண்ணகரம் என்று பெயர் பெறும். நாயக்கராட்சிக் காலத்தில் பெண்ணரசு புரிந்த அரசி மங்கம்மாளின் அறமாகக் கட்டப்பட்டுள்ளது. 'இரதகர் விண்ணகர்' என்பதால் வைணவத் தலமென்பது தெளிவாம். இப்பகுதிக்கு நேர் மேற்கே ஒருகல்லளவிலுள்ள திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள பெருமானுக்குரிய விழா நிகழ்ச்சி யொன்றின் பொருட்டு இம்மண்டபச் சூழல் காணப்பட்டதாகத் தெரிகின்றது. பாரதப்போரில் அருச்சுனன் இரதத்தில் நின்று, தமது கை வன்மையாலும், வண்மையாலும் பலருக்கு முக்திபேறளித்த கண்ணபிரானையே 'இரதகரர்' என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. அரசி மங்கம்மாளின் ஆட்சியில் நாட்டதிகாரியாயிருந்த முழுவதும் வல்லவன் தம்பிரான் என்பவரால் இவ்வெள்ளித் திருமுற்ற விண்ணகர் ஏற்படுத்தப்பட்டுள்ள தென்பது கல்வெட்டுச் செய்தியால் தெளிவாகின்றது.

கல்வெட்டுத் தூணின் மகர வெல்கொடி சிற்பவடிவில் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சின்னம், அரசி மங்கம்மாள் காலத்தில் மதுரையரசுக்குரிய சின்னமாக இருந்ததுபோலும்! இவ்வாறான வரலாற்றுக்குரிய செய்திகளையெல்லாம், இன்று இடிபாடுகளுடன் காடடர்ந்து கிடக்கும் வெள்ளித் திருமுற்றமான இரதகர விண்ணகரத்தில் நிற்கும் கல்லும் அதிலுள்ள சொல்லும் உணர்த்தின,

சென்ற இதழின் தொடர்ச்சி

# களவியல் உரைநலம்

## (இரண்டாம் நூற்பா உரை)

(திருவாட்டி மேனகை அம்மையார் இராணிப்பேட்டை)

பின் இருவயினொத்தல் என்ற தொடர்க்கு இவர் இங்ஙனம் பொருள் விரித்தது என்னையோ எனின் 'இருவயினொத்தல்' என்ற துறைக்கண் மணிவாசகப் பெம்மான்,

'உணர்ந்தார்க் குணர்வரி யோன்றில்லைச் சிற்றம்ப லத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிக்
கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புகுரிழ லாளல்குல் போல வளர்கின்றதே''

என்ற பாடலை நினைவிற் கொண்டே கூறினரென்க. ஈண்டும் புணருந்தொறும் புதிதாய் வளர்கின்றது பெரும் போகம் என்றாரன்றி அன்பன்றென்க. ஆயின் இப்புணர்ச்சியை முன்வைத்தே தலைவன்பால் அன்பு தோன்றுமெனின் அஃது பயன்கருதிய கடைப்பட்ட அன்பாகலான் இவரிடை நிகழுமன்பு அத்தன்மைத்தன்றென்க எனவேயாம் மேலே கூறியதே உரையென அறிக.

### ௰உ. நயப்பு

நயப்பு என்பதை உணர்த்தப் புக்க உரையாசிரியர்,

''இனி, அவ்வகை புணராத முன்னும் புணர்ந்த பின்பும் ஒத்த அன்பினனாய் நின்ற தலைமகன் பிரியும் என்றுமோ? பிரியும் என்றுமே எனின் அன்பிலனாயினனாம். என்னை? பிரிவு அன்பிற்கு மறுதலையாகலான். இனிப் பிரியானே எனினும் அன்பிலனாயினனாம். என்னை? பிரியாதிருப்ப இவ்வொழுகலாறு பிறர்க்குப்புலனாம், ஆகவே அவள் இறந்து படும். அவள் இறந்து பாட்டிற்குப் பரியானாயினனாம். ஆகவே மூன்றாவது செய்யப்படுவது இல்லையாலோ எனின் பிரியும் என்பது, ஆயின் அன்பின்மை தங்காதோ எனின் தங்காது. பிரிவும் அன்பினானே நிகழுமாறு சொல்லுதும்.

''தெய்வப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் இயற்கையன்பினானும் செயற்கை யன்பினானும் கடாவப்பட்டுத் தனது நயப்பு உணர்த்தும். இயற்கை யன்பு என்பது காரணமின்றித் தோன்றும் அன்பு. செயற்கை அன்பு என்பது அவன் நின்று தலைமகன் சொல்வது நயப்பு என்பது''

என விளக்குவார். பின்னர் நயப்பு என்ற துறைக்கண் வரும் செய்யுட்கும் உரைவிரிப்பர். அவ்வுரைத்திறம் செய்யுட்கு உரைகாணப் புக்கார் பலரும் தழீஇக் கோடற்குரித்து.

''நயப்பு என்பது தலைமகன் வண்டிற்கு உரைப்பானாய்த் தலைமகள் கேட்பத் தன் நயப்பு உணர்த்தியது. எங்ஙனமோ எனின், 'அவள் கையினைச் செங்காந்தள் எனவும் கண்ணினைக் கருங்குவளை எனவும் வாயினை அரக்காம்பல் எனவும் சென்று தடுமாறிக் குழல்மேலும் கோதைமேலும் சுழல்வாய், இவள் நறுநாற்றம் அறிதியன்றே! இனி, நீர்ப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ என்றிப் பல்வேறு வகைப்பட்ட பூவின்மேலும் செல்வாய். ஆம்பல பூவினது நாற்றம் அறிதியன்றே! அறிவாய். இவ்வகைப்பட்டாள் செவ்வாய்போல நாறுந் தகைமைய உளவே ஆம்பல் நறுமலர்? என்றால் தேறப்படும் வண்டே, உரையாய்' என உணர்த்தினான் என்பது. அதற்குச் செய்யுள்.

''வேறும் என நின் றிகல்மலைந் தார்விழி ஞத்து விண்போ
யேறுந் திறங்கண்ட கோன்தென் பொதியி
விரும்பொழில்வாய்த்
தேறுந் தகையவண் டேசொல்லு மெல்லியல் செந்துவர்வாய்
நாறுந் தகைமயை வேயணி யாம்பல் நறுமலரே''

''என்றது, வேறும் எனநின்று இகல் மலைந்தார் விழிஞத்து விண்போய் ஏறுந்திறங்கண்ட கோன் தென்பொதியில் இரும் பொழில்வாய் வண்டாதலால், தேறுந் தகைமைய என்றவாறு.''

''என்றதனாற் போந்த பொருள்: வெல்லுவது கருதி விழிஞத்துக் கடற்கோடியுள் மலைந்த பல்வேந்தரையும் படுவித்து, இவர் என்பகைஞர் என நினையாது அவர்க்குத் தவத்தானும் தானத்தானும் அன்றிப் புகலாகாச் சுவர்க்கங் கொடுத்த பெருந்தன்மையானது நிலத்து வண்டாதலின் நீயும் பெருந் தன்மையை. ஆகலின் தெளியப்படுத்தி. அல்லதூஉம், பொதியில் என்பது எல்லாத் தேவர்களுக்கும் பொதுவாகிய இல் என்றவாறு. அத்தேவர்களுடைய வனம் அவ்விரும் பொழில் என்றவாறு அப்பொழில் வாழ்வால், நீயும் அத்தன் மையை அன்றே! ஆகலானும் தெளியப்படுத்தி அன்னாய் பொய் உரையாய். இவள்வாய்போல நாறும் ஆம்பற்பூ உளவே என்றவாறு. என்றதனால் தன் நயப்பு உணர்த்தினான்.

''இனி மெல்லியல் என்பது மென்மையைத் தனக்கு இயல்பாக உடையாள் என்றவாறு மென்மை என்பது பெண் டிற்கு மிகஇயல்பு. அதனைத் தனக்குச் செய்து கோளன்றி

இயல்பாகவுடையாள் என்றவாறு எனவும்தன் நயப்பு உணர்த்தினன்.

"இனிச் செந்துவர் வாய் என்பது—செம்மையைத் தனக்கு மிகவுடையவாய் என்றவாறு. செம்மையுடையார் என்பது உலகத்துத்தம் குணங்களை மறையாது ஒழுகுவாரை இவள்வாயும் தன்குணமாகிய வடிவும் மொழியும் நறுநாற்ற மும் என்றிவற்ருன் விளங்கிப் பொலிந்து தோன்றுவது என்ற வாறு. என்றதனனும் தன் நயப்பு உணர்த்தினனம்.

"இனி நாறும் தகைமையவே என்பது ஐந்து ஏகாரத் துள்ளும் இவ்வேகாரம் வினவின்கண் வந்த ஏகாரம் எனக் கொள்க. 'தேற்றம் வினவே பிரிநிலை யெண்ணே, ஈற்றசை யிவ்வைந்தேகாரம்மே'. என்பவாகலின்.

"அணி ஆம்பல் நறுமலர் என்பது—அழகிய ஆம்பல் நறு மலர் என்றவாறு. அணி ஆம்பல் நறுமலர் என்றதனற் போந்தது அழகியாரின் குணங்களும் பெரும்பாண்மையும் அழகியவாகலான் அவ்வாம்பற் கண்ணது மிக்க நறுநாற்றம் என்றற்குச் சொல்லப்பட்டது. அவ்வகை நறுநாற்றம் மிக வுடைய ஆம்பல் இவள் வாய்போல நாறுமே என்றவாறு.

"மலரே என்று நின்ற ஏகாரம் ஈற்றசை ஏகாரம்.

"இனி இதனைச் சோதிக்குமாறு: 'சொந்துவர்வாய் நாறுந்தகை கொள்க. என்றதல்லதுபோல என்றதில்லையால் எனின் உவமம் தொக்குநின்றதெனக் கொள்க. என்னை?

"வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகைஎன்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே"
"என்ருேதினமையின்

"ஆயின், உவமம் தொகுக. உவமிக்கும் முறைமையன்றி உவமித்தீர். உலகத்துப் பெண்பால்கள் வாயாது நறுநாற் றத்திற் குவமையாவது ஆம்பல் என்றவாறு என்னை?" ஆம்பல் நாறுந்தேம்பொதி துவர்வாய்" என்பவாகலின். இவ்வாறன்றி இவள்வாய் போல நாறும் ஆம்பல் உளவே எனவாயை உவமையாக்கி ஆம்பலை உவமிக்கப்படும் பொருளாகச் சொல் லுதல் குற்றம் பிற எனின், அறியாது சொல்லினய். உலகத்து இவை உவமை இவை உவமிக்கப்படும் பொருள் என்று நிலை பெற்றன உளவேயில்லை. உரைக்குங் கவியது குறிப்பினன் உவமையும் உவமிக்கப்படும் பொருளாம். உவமிக்கப்படும் பொருளே உவமையாகவும் அமையும் என்னை, "பொருளது ரைவே புணர்ப்போன் குறிப்பின், மருளற வருஉ மரபிற்

றென்ப'' என்றோதினமையின். ''கண்போனெய்தல் போர் விற். பூக்கும்!'' எனவும் ''கண்ணென மலருங் குவளை'' எனவுங் குவளை உண்கணிவளும் யானும்' எனவும் 'நெய்த லுண்கண் பைதல்கூர'' எனவும் இருவகையானும் சொல்லுப. ஆகலின் இருவகையானும் உவமிக்க அமையும் என்பது.

''இனி, மருத நிலத்து ஆம்பலைக் குறிஞ்சி நிலத்து ஆம்ப லாகச் சொல்லுதல் திணைவழுவாம்பிற எனின் ஆகாது. குறிஞ்சி நிலத்தே திரிவன அல்ல. எல்லா நிலத்தும் சென்று எல்லாப்பூவும் ஊதுமாகலானும் அமையும். அல்லதூஉம்,

''எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதோடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயதத வாகும்''

''என்பதாகலானும் அமையும். இனிச் சுனைக்குவளையும் சுனையாம்பலும் உண்மையானும் அமையும். அது பெருங் குறிஞ்சியிற் கண்டுகொள்க.''

'இனித் தலைமகன் என்னும் சொல்லோடு மாறுகொள் ளும் பிறனொரு தலைமகன் நிலத்துப் புணர்ந்தான் என்றமை யின் எனின் மாறு கொள்ளாது என்னை? நின்ற ஒருவனை பாண்டியனது பொதியிலிடமாகச் சொன்னமையான். என்னை? அக்குலத்துள் தோன்றுவார் தேவர்களே யாகலான் நம்மால் வேண்டப்பட்ட தலைமகன் தேவருள் மிக்கான் எனப்படான் மக்களுள் மிக்கானையதல்லது. ஆகலின் இவன் நிலத்துப் புணர்ந்தான் என்பது தலைமையொடு மாறுகொள்ளாது என்பது., அல்லதூஉம்

''மழைவளந் தரூஉ மாவண் தித்தன்
பிண்டி நெல்லி னுறந்தை யாங்கட்
கழைநிலை பெருஅக் காவிரி நீத்தங்
குழைமா ணொள்ளிழை நீவெய் யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயநா டியானையின் முகனமர்த் தாஅங்
கேந்தொழில் ஆகத்துப் பூந்தார் குழைய
நெருந லாடினை புனலே''

''என்றும் 'பகுவாய் வராஅற் பல்வரியிரும் போத்து, என்றும் கிளவித் தலைமகனைப் பாட்டுடைத் தலைமகன் நிலத் துப் புனலாடினன் என்றும் புணர்ந்தான் என்றும் பிறசான் றோர் செய்யுளுள்ளுஞ் சொல்லப்பட்டதாகலினானும் அமையும் என்பது. இப்பாட்டினல் தன் கண்நின்ற அன்பு வெளிப்

## தமிழ் வாழ்க!

# பொன்விழா மலர் பற்றிய வேண்டுகோள்!

### கரந்தைத் தமிழ்ச்சங்கம்

பொன்னெழுத்தால் புலம் வித்தி நலம் விளைக்கும் புகழ் சால் புலவீர்! வணக்கம்.

அமிழ்தினும் இனிய தமிழ் வளம் பரப்பும் மொழிக் கழகங்களுள் கதிரெனத் திகழும் நம்கரந்தைத் தமிழ்ச் சங்கப் பகலவன் எழுந்தநாள் தொட்டுச் செந்தமிழ் ஒளிபரப்பிப் பண்டைய புகழையும் சிறப்பையும் காத்து வளர்த்து வரும் தொண்டினை நாற்றிசை அறிஞர், நாவலர், பாவலர் யாவரும் அறிவார்.

சங்கம் நிறுவிய துங்கன் த. வே. இராதகிருட்டினபிள்ளையவர்களும் அவர்தம் நண்பரும் மொழியே நம்விழியென உணர்ந்து நாட்டிற்குணர்த்த அமைத்த நம் சங்கம் சிறுகுடிலிற்றொடங்கிக் கீற்றுக் கொட்டகையில் தவழ்ந்து, தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் ஊக்கத்தாலும் தமிழன்பர்கள் தாளாண்மையாலும், வேளாண்மையாலும் இரு செங்கற் கட்டிடத்துள் வளர்ந்து ஒருபெருந் தமிழ் மன்றத்தில் நடம் புரிந்தமை பெருமக்கள் அறிந்ததே.

---

படுத்துத் தலைமகளைப் புகழ்ந்து நயப்பு உணர்த்திற்றாயிற்றுப் போந்த பொருள்."

என்று நீண்டதொரு பொருளுரை செய்தார். தலைமகன் பிறிதொரு தலைமகன் நிலத்துக் கூட்டம் பெற்றான் என்பது மாறுகொள்ளும் என்றற்குத் தந்த விளக்கம் ஒப்புவதாகாது என்னை? தலைமகளும் பொருவிறந்தாளாக அவளது பெற்றோரும் அன்னராகல் வேண்டுமன்றே! அத்தகையார் இத்தலைமகனிற் கீழ் பட்டாராவாரோ? எனவே பிறிதொரு தலைமகனிலத்துப் புணர்ந்தான் என்பது மாறுபடுமாறில்லை. அன்றியும் பாண்டியர் குலத்தினர் புத்தேளாவர் என்பதும் ஏற்புடைத்தன்று. இது சாலா உயர்வு நவிற்சியேயாம். அன்றியும்—தலைமகன் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியோருள் ஒருவனாயிருத்தலியற்கை. எனவே பொருவிறந்தானாய தலைமகன் வேந்தனாயிருத்தல் இன்றியமையாதவொன்றன்று. காழிப்பிள்ளையும், நாவின் மன்னரும் ஆரூரரும் மக்களுள் பொருவிறந்தார்களேயன்றோ? ஆக அவர்தாம் பிறர்க்குரிய நிலத்திடை வாழ்ந்தனராதல் அவர்க்குவடுவாமோ? ஆகாது அதுபோல என்க. இனி இச்செய்யுளோடு பின்வரும் பாடல்களையும் நோக்குக.

(தொடரும்)

அது நீடுவளர்ந்து பீடுற ஓங்கப் பெரிதுங் கனவிய பெருமகனார் தமிழவேளவர்கள் இருந்து நடத்திய வெள்ளி விழாவிற்குப்பின் பன்னூறு சங்க உறுப்பினர்களைக் கண்ணாகக் கொண்டு மன்னிய தொண்டுகள் மாண்புறக் செய்துவருதலால் சங்க நிலையங்கள் யாவும் பொலிவுற்றோங்கித் தமிழவேளின் தமிழன்டைப் போலத் தெள்ளிதின் வளர்ந்து வருதல் கண்கூடாம்.

வெள்ளிவிழாவிற் பூத்த "புலவர் ல்லூரி"யைச் சூழ்ந்த இடமும் பொருளும் இல்லா வெப்பத்தை ஏந்தல் ஏ. டி. பன்னீர்ச் செல்வனார் முதலாய துணைவரின் நட்புமழையாலும் தமிழன்பர் அனைவரின் உரத்தாலும் நீக்கிப் பல்கலைக் கழகத்தாரின் ஒப்பம் பெற்று ஒருசில மாணவர்களோடு தொடங்கப் பெற்ற கல்லூரி நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை போன்ற பெருமக்கள் பணியாலும் சங்கத்தார் ஆதரவாலும் வளர்ந்து இதுகாறும் பன்னூறு புலவர்களை நாட்டிற்களித்து இதுபோது 120 மாணவர்களைப் பெற்றிலங்குகிறது. இளஞ்சிறார்கள் சிலரோடு தொடங்கிய இராதாகிருட்டின தொடக்கப் பள்ளி 12 பிரிவுகளுடன் 505 சிறுவர் சிறுமியர்க்கு எழுத்தறிவூட்டி வருவதோடு 150 சிறார்களுக்கு நண்பகல் உணவும் பிறவும் வழங்கி மிளிர்கிறது. உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி 21 பிரிவுகளுடன் 960 மாணவ மாணவியர்களைப் பெற்றுக் கண்ணெனத்தகும் கல்விபுகட்டிக் கமழ்கிறது. ஒரு சிலரைப் புரந்துவந்த ஏழைமாணவரில்லம் இற்றைநாள் 45 ஆதரவற்ற சிறுவர்கட்கு உணவு உடை உறையுள் தந்து அறிவூட்டித் திகழ்கிறது.

அருட்டிரு விபுலானந்த அடிகளின் யாழ்நூல் நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் தொல்காப்பிய உரை முதலியவற்றையும், மன்னார்குடி சோமசுந்தரம்பிள்ளை பண்டித L. உலகநாதபிள்ளை, மறைமலை யடிகள், நாட்டார், கவியரசு, சதாசிவ பண்டாரத்தார் முதலாய அறிஞர் பெருமக்களின் சீரியகருத்துக்களையும் ஆய்வுரைகளையும் வெளியிட்டுப் பெருமை கொண்ட 'தமிழ்ப் பொழில்' 900 க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு தமிழ் நலம் பரப்பி வருகிறது. வாலறிவு நல்கும் நூல்நிலையம் 10,000 க்கு மேற்பட்ட பல துறை, பன்மொழி நூல்களையும் தாளிகைகளையும் கொண்டிலங்குகிறது.

சைகோன் தமிழன்பர்கள் துணையோடு பெருவணிகர் கூத்தாநல்லூர் அஜீஸ் அவர்களும், சுப்பிரமணியப்பிள்ளையவர்களும், அருணாசலம் படப்பிடிப்பு நிலைய உரிமையாளர் A. K. வேலன் அவர்களும் அளித்த பெருங் கொடைகளாலும். திரு. N. L. வரதராசலு நாயுடு, திரு. நா. சொக்கநாதன் செட்

டியார் ம. ந. கொண்டல் நாயுடு முதலாய தஞ்சைப் பெரு வணிகர்களின் ஊக்கத்தாலும் திரு. சி. வேதாசலனார். அவர்கள் சங்கத்தலைவர் திரு. ச. சுயம்பிரகாசம் அவர்கள் ஆய பெரு மக்கள் முயற்சியாலும் உழைப்பாலும், தென்னங்குடி திரு. சுந்தரராச நாட்டார் அவர்களின் அறநிதியாலும் இன்றைக்கு வலிவும் வனப்பும் வாய்ந்த மூன்று கெட்டிக் கட்டிடங்களோடு சிறந்து விளங்குகின்றது. மேலும் சங்கச் செயற்குழு உறுப்பினரின் முயற்சியாலும் தமிழன்பர்கள் ஒத்துழைப்பாலும் அரசாங்கஉதவியாலும் மேல்நிலைக் கட்டிடங்களும்—நூல் நிலையக் கட்டிடமும் எழு இருக்கின்றன.

1911 ஆம் ஆண்டுத் தொடங்கப்பெற்ற நமது சங்கம் 1936 ஆம் ஆண்டில் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகளின் தலைமையில் பல பேரறிஞர்களின் சொற்பொழிவுகளோடு வெள்ளிவிழாக் கொண்டாடியது. அதுபோது புலவர் கல்லூரியைத் தோற்றுவித்ததோடு, கரந்தைக் கட்டுரை என்றபெயரால் பலதுறைப் பேரறிஞர்களின் சொல்லோவியங்களைக் கொண்ட வெள்ளிவிழா மலர் ஒன்றும் வெளியிடப் பெற்றது. அதனுள் அமைந்த சில கட்டுரைகளைத் தொகுத்துச் சென்னைப் பல்கலைக்கழக முதனிலை—இடைநிலை வகுப்புக்களுக்குப் பாடமாக வைக்கச்செய்து சீரும் சிறப்பும் அடைந்துள்ளது. இதுபோது சங்கம் 50 ஆண்டுகளைக் கடந்து பொன்விழாக் கொண்டாடும் நிலையை எய்தியுள்ளது. இவ்விழாவைப பல்லாற்ருனும் பாங்குற நிகழ்த்திப் பைந்தமிழ் நாட்டிற்குப் பயன் தரவும் நாட்டினரால் பயன் பெறவும் விழைகிறது.

பொன்விழா நிகழ்ச்சிகளில் "பொன்விழா மலர்" வெளியீடு ஒரு சிறந்த இடத்தைப் பெற வேண்டுமெனச் சங்கத் தலைவரும் செயற்குழுவினரும் தமிழன்பர்களும் அவாவிமுயல்கின்றனர்.

அம்மலர் சிறந்து அறிவுமணம் வீசும் பொருட்டுத் தங்கள் சிறந்த கருத்துக்களை, செய்யுள், கட்டுரை, ஆய்வுரைகளின் வாயிலாக வழங்கிச் சங்கத்தாரை ஊக்கித் தமிழன்னையின் அருள்பெற வேண்டுமென அன்போடு வேண்டிக் கொள்கின்ரேம். 1964 திசம்பருக்குள் தங்கள் சொல்லோவியங்களை வரைந்து அன்புகூர்ந்து வழங்கியருளின் தொகுத்து முறைப்படுத்தி அச்சேற்ற வாய்ப்பாக இருக்குமெனக் கேட்டுக் கொள்ளுகின்ரேம்.

வணக்கம்.

வளர்க தமிழ்த் தொண்டு! வாழ்க தமிழ் !

பொழிற்ருெண்டர்.